
விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 286 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (01.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### வருமான வீழ்ச்சியால்
## மக்களிடையே கடும் மனவிரக்தி
### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினால், நாட்டு மக்கள் மத்தியில் கடுமையான சமூக அழுத் தங்கள் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

19

## பயங்கரவாத சட்டத்தை மாற்றுக; கருத்துச் சுதந்திரம் முக்கியமானது
### இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

மக்களின் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பது மிகவும் முக்கிய மானது எனத் தெரிவித் துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பயங்கரவாத சட்டம் மாற்றியமைக்கப் பட வேண்டும் என தெரி வித்துள்ளார்.

தனது டுவிட்டர் பதவி லேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கை நிகழ் நிலை பாதுகாப்பு சட்ட மூலம் குறித்து ஆராய் ந்து வருகை யில் தொழில்

19



### முல்லை நீதிபதி பதவி விலகல்
# உடன் விசாரணை முன்னெடுக்குக



### ஜனாதிபதி ரணில் உத்தரவு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவண ராஜா பதவி விலகியமை தொடர்பில் முழுமையான விசாரணையை முன்னெ டுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உத்தரவிட்டுள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்துவரும் தேர்தலில் வெற்றி பெறுவோம்
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

அடுத்து வரும் தேர்தலில் நாமே வெற்றி பெறு வோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, நாமல் ராஜபக்ஷவின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில்

19

### புகலிடக் கோரிக்கைக்காக

## முல்லை நீதிபதி வெளியேற்றம்
### சரத் வீரசேகர

18 ஆம் பக்கம் பார்க்க

## நீர்த்தொட்டிக்குள் விழுந்த ஒரு வயது குழந்தை உயிரிழப்பு
### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)


கிளிநொச்சி - செல்வ நக ரில் தண்ணீர் தொட்டியில் விழுந்த ஒரு வயது பெண் குழந்தையொன்று உயிரிழந் துள்ளது.

இதில் பரணிதரன் திவ னிக்கா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

2 குழந்தைகளுடன் விளை யாடிக் கொண்டிருந்த போது வீட்டின் அரு

19

## இந்த நாடும் அரசாங்கமும் வெட்கித் தலைகுனிய வேண்டும்
### நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் சம்பந்தன்



(திருகோணமலை)

அழுத்தங்களால் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகியமை தொடர்பிலும், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவர் நாட்டை விட்டு வெளியேறியமை குறித்தும் இந்த நாடும் அரசும் வெட் கித் தலைகுனிய வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கடுமை

19

## சரத் வீரசேகர என்ற குண்டராலேயே முல்லை நீதிபதி பதவி விலகினார்
### முன்னிலை சோசலிசக் கட்சி



(கொழும்பு)

சரத் வீரசேகர என்ற இனவாத குண்டரின் அச்சுறுத்தல் காரண மாகவே முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகி னார் என முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்வியாளர் புபுது ஜய கொட குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகவியலாளரை சந் தித்து கருத்து வெளியிடும்

19

## வெளிநாட்டு வேலைவாய்ப்பில் கவனம் செலுத்த வேண்டும்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு கொள்கையில் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்து விட் டது என எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

வெளிநாட்டு தொழிலாளர் சந்தை தொடர்பான கலந்து ரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்

19




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சர்வேஸ்வரசெவ்வேள்

**(முன்னாள் முகாமையாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

அன்னை மடியில்-29.10.1957 இறைவன் அடியில்-29.09.2023



கொக்குவில் மேற்கு கொக்கு விலைப் பிறப்பிடமாகவும் மாவடி வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சர்வேஸ்வர செவ்வேள் அவர்கள் 29.09.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் (முன்னாள் சிந்மய பாரதி ஆசிரியை) அன்புக் கணவரும் வஜனியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சர்வேஸ்வரரூபி மற்றும் சர்வேஸ்வரஜோய், சர்வேஸ்வர லலிதா, சர்வேஸ்வர விமோசனம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மற்றும்-யோகேஸ்வரி, முருகமூர்த்தி, கந்தசாமி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் சோதிலிங்கம், இராஜலஷ்மி, சிவகௌரி ஆகியோரின் சகலனும் மற்றும் காலஞ்சென்ற சர்வானந்தம், கமலானந்தன், கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மற்றும் சர்மிளா(லண்டன்), சர்மிலன் (லண்டன்), சர்வன்(லண்டன்), ஸ்ரீவத்சலனி(கனடா), சுலக்சனா, ஜனேசன், உமாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லிங்கேஸ்வரன்(லண்டன்) வாசுகி (லண்டன்), வேணிக்கா(லண்டன்), சத்தியேஸ்வரன், செந்தூரன், கயல்விழி, பிரசாந் ஆகியோரின் சித்தப்பாவும் ஷாலினி, கார்த்திகன், கபிலன், கிஷோர், கிஷானி, கிசாந், சரின், அபினா, காருண்யா, யதுகிருஸ்ணா, மதுவர்ணா, பவந்திகா, விகான், ஏகனேகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 01.10.2023 அன்று அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மாவடி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்
074 217 4151

(17301)


**வீடு வாடகைக்கு தேவை**

மூன்று அங்கத்தவரை கொண்ட குடும்பம்(அரச உத்தியோகம்) ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. (சிவன் பண்ணை வீதி, சீனிவாசகம் வீதி விரும்பத்தக்கது.)

(17303)

**072 923 7214**


## திருமலையில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

திருகோணமலை இலுப்பைக் குளத்தில் தடை செய்யப்பட்ட பகுதியில் விகாரை அமைக்கப்பட்டுவரும் கட்டுமானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலுப்பைக்குளம் மற்றும் அதனை சூழவுள்ள கிராமங்களில் காலாகாலமாக தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)


**Romania வேலைவாய்ப்பு விசா**

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

(C-7352)

**021 222 1265,076 250 0098**

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- தரகர் தேவையில்லை
- நன்னீர் ஊற்று.

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17300)


# சேவைநலன் பாராட்டு

## திரு.A.M.C.மகேந்திரன்

**கல்விப் புலம்**

**ஆசிரியராக**

1.நீர்கொழும்பு/விஜயரட்ணம் இந்துக் கல்லூரி
02.06.1997 - 12.02.2001 வரை

**ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும்**


2. யாழ்.மத்திய கல்லூரி
13.02.2001 - 14.05.2013 வரை

**அதிபராக**

3.யாழ்.புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலயம்
15.05.2013 - 13.01.2016 வரை

**பிரதி அதிபராக**

4.யாழ்.இந்துக் கல்லூரியில் : 14.01.2016 - ஓய்வுபெறும் வரை



வடமராட்சி நெல்லியடியில் பிறந்துதித்த தவப்புதல்வன்!
அலோசியஸ் திரேசம்மா தம்பதியர் பெற்ற கனிஷ்ட புதல்வன்!
தரம் பத்து வரை திருஇருதயக் கல்லூரியில் இளமைக்கல்வி முகிழ்விட
உயர்தரம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் துளிர்விட்டது !

யாழ்.பல்கலையில் வியாபார நிர்வாக இளமாணி பூர்த்தி செய்த கையுடன் மேற்கே பயணம்
சுவிஸில் ஈர்மூன்றாண்டுகள் ஆனாலும் தாயகம் உன்னைத் திருப்பி அழைத்து வாழ்க்கை தந்திட
சாந்தகும(ா)ரியைக் கைப்பிடித்து இல்லறத்தின் பயனாய் இரு குழந்தைச் செல்வங்கள்
இடையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் கல்வி முதுமாணியும் வந்து சேர்ந்தது.

நீர்கொழும்பு விஜயரட்ணம் இந்துக் கல்லூரியில் 02.06.1997 இலிருந்து 12.02.2001 வரை
யாழ்.மத்திய கல்லூரியில் 13.02.2001 இலிருந்து 14.05.2013 வரை ஆசிரியராக
யாழ்.புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலயத்தில்
15.05.2013 இலிருந்து 13.01.2016 வரை அதிபராக
யாழ்.இந்துக் கல்லூரியில் 14.01.2016 இலிருந்து இன்றுவரை பிரதி அதிபராக

இவ் உயரிய பணிகளையெல்லாம் உயிர்ப்புடன் நீ ஆற்றிய சேவை கண்டு
இன்முகத்துடன் எங்களை நீ வழிநடத்திய விதங்கண்டு
கூடிக்களித்திருக்கையில் பதவி மறந்து எங்களுடன் பழகிய விதங்கண்டு
பூரித்து நின்று உன் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

**உயர்தர ஆசிரிய நண்பர்கள்**

(17234)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் கடுமையான முடிவுகளால்
# மீண்டும் நெருக்கடி வரலாம்
## பொருளியல் துறை பேராசிரியர்

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் திரிசங்கு சொர்க்க நிலையில் இருக்கிறது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் கலாநிதி அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சர்வதேச நாணய நிதியத்தின் குழு நாட்டுக்கு வருகை தந்து இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு கேட்கிறது.

இப்பொழுது 3.6 பில்லியன் டொலர்கள் மத்திய வங்கியிடம் கையில் இருக்கின்றன. ஆனால் இலங்கை அரசாங்கம் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தினால் இந்தத் தொகை குறையும். இறக்குமதிகள் அதிகரிக்கும்.


சர்வதேச நாணய நிதியமும் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தச் சொல்லியே கூறுகிறது. அப்படிச் செய்யும் பட்சத்தில் இலங்கை அரசாங்கத்தினுடைய நிலைமை குறிப்பாக டொலர் பற்றாக்குறை ஏற்படலாம். மீண்டும் நெருக்கடி வரலாம்

சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் இயலாமல் இருக்கிறது. அந்த இலக்கை அடைய முடியாமல் இருக்கிறது. இந்த இடத்தில் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தாமதிக்குமாக இருந்தால் அரசாங்கத்தால் மேலும் வெளிநாட்டு கடன்களை பெற முடியாத சூழல் ஏற்படலாம்.

நிபுணர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வு காணாத பட்சத்தில், நாட்டை விட்டு அவர்கள் வெளியேறும் வீதம் அதிகரிக்கும்.

வங்கியாளர்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இவர்கள் வெளியேறுவது கண்ணுக்கு தெரியாது. வைத்தியர்கள் வெளியேறுவது மாத்திரம் தான் கண்ணுக்கு தெரியும். ஏனென்றால் நோயாளிகள் பாதிக்கப்படுவார்கள், இறப்பு விகிதம் அதிகரிக்கக்கூட வாய்ப்பிருக்கும். ஏனையவர்கள் வெளியேறுவது தெரியாது. அது பொருளாதாரத்தில் நீண்ட கால பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் பேராசிரியர் அமிர்தலிங்கம் தெரிவித்தார். (நி)

# நில்வள கங்கை பெருக்கெடுப்பு மாத்தறை வீதிகள் வெள்ளத்தில்





(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழையினால் நில்வள கங்கை பெருக்கெடுத்துள்ள நிலையில், அப்பகுதியில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அங்கு போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது.

அக்குரஸ்ஸ - மாத்தறை பிரதான வீதியின் பரடுவ பகுதி நீரில் மூழ்கியுள்ளது. இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து மேலும் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அக்குரஸ்ஸ - ஹொரகொட ஊடான மாத்தறை வீதியை பயன்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அக்குரஸ்ஸ - சியம்பலாகொட வீதியின் பாணடுகம பகுதியும் நீரில் மூழ்கியுள்ளது.

அக்குரஸ்ஸ - கம்புறுப்பிட்டிய வீதி மற்றும் அக்குரஸ்ஸ - மாகந்துர வீதி என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி)

# பிளாஸ்ரிக் தடை சட்டம் அமுல்

(கொழும்பு)

ஒருமுறை பயன்படுத்தும் மற்றும் குறுகிய கால பிளாஸ்ரிக்கை தடை செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று முதல் அமுலுக்கு வரும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

வர்த்தமானியை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் தலைவர் சுபுன் எஸ்.பத்திரகே தெரிவித்தார்.

அதன்படி, ஒக்டோபர் முதலாம் திகதி முதல் இது தொடர்பான திடீர் சோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தலைவர் வலியுறுத்தியுள்ளார். (நி)


# நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் விசாரணைக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி

(கொழும்பு)

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி இது தொடர்பில் உத்தரவு விடுத்துள்ளார்.

தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸாருக்கு அல்லது நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு நீதிவான் ஒருபோதும் அறிவிக்காத காரணத்தினால் ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கினார். (நி)



# 20,000 ரூபா சம்பள உயர்வுகோரி அரசாங்க ஊழியர்கள் போராட்டம்

(கொழும்பு)

இருபதாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி அரசாங்க ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வாரத்தில் குறித்த தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என அரசாங்க மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான தனியார் நிறுவனங்களின் தொழிற்சங்க ஒன்றிய அழைப்பாளர் ரவி குமுதேஷ் இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மாதாந்த சம்பளம் 20 ஆயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டும் என்பதே போராட்டத்தின் பிரதான கோரிக்கை என அவர் தெரிவித்துள்ளார்.


மேலும், தொழிற்சங்கங்களை ஒடுக்குதல், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஊடக ஒழுக்கவிதிகள் சட்டம் போன்றவற்றை எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இந்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளை தெளிவுபடுத்திய போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை என அவர் கூறியுள்ளார். (நி)


# மரண அறிவித்தல்

## அமரர். செல்லத்துரை சத்தியமூர்த்தி (மாஸ்டர்)

(அதிபர். மீனாட்சி வர்த்தகக்கல்லூரி. கொட்டடி. யாழ்ப்பாணம்-யாழ். கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் - நல்லை ஆதீன முன்னாள் மேலாளர்)



பிறப்பு - 04.12.1939
இறப்பு - 27.09.2023

கொட்டடி சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை சத்திய மூர்த்தி 27.09.2023இல் கனடாவில் காலமானார். இவர் செல்லத்துரை செல்லக்கண்ணுவின் அருமை மகனும் நவமணியின் கணவரும் கனடாவைச் சேர்ந்த ஆனந்த மூர்த்தி, அங்கையர் கண்ணி, மருதாசல மூர்த்தி, லட்சுநாராயணி ஆகியோரின் தகப்பனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

(17294) தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண அரையிறுதியில் இந்தியா மோத வாய்ப்பு




## முரளிதரன் கணிப்பு

இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள உலககிண்ண கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியில் மோதவுள்ள அணிகள் எவை என்பதை இலங்கையின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கணித்துள்ளார்.

இதன்படி அரையிறுதி போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் ஆகியன அடங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் திறமை மற்றும் வெற்றியின் வரலாறு ஆகிய வற்றுக்கு பெயர்போன இந்த அணிகள், உலக கிண்ணபோட்டியில் வலுவான போட்டியாளர்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முன்னணி அணிகள் அரையிறுதியில் இடம்பிடிப்பதால், கிரிக்கெட் ரசிகர்கள் பரபரப்பான போட்டியை காண ஆவலுடன் உள்ளனர். (நி)

# 2023 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷ் வெற்றி




2023 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கு முன்னதாக நடைபெற்ற இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான பயிற்சிப் போட்டியில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தியாவின் குவாட்டி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் தசுன் ஷானக முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

அதன்படி, இலங்கை அணி 49.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 263 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 42 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. (நி)

# அக்சர் பட்டேலுக்கு பதிலாக சாகல் இடம்பெற வேண்டும்

## யுவராஜ் சிங் தெரிவிப்பு



உலகக்கோப்பை கிரிக்கெட் (50 ஓவர்) போட்டி வருகிற 5 ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகளும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் அக்சர் பட்டேல் இடம் பெற்று இருந்தார். ஆனால் அவர் காயம் அடைந்ததையடுத்து அணியில் இருந்து நீக்கப்பட்டார். அக்சர் பட்டேலுக்கு பதில் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் இந்திய அணியில் அக்சர் பட்டேலுக்கு பதில் யசுவேந்திர சாகலை சேர்த்திருக்க வேண்டும் என்று இந்திய அணி முன்னாள் வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2927

Search for people, places and things

### கார்த்தி



மழை பெய்யும் போது, ஆற்றில் தண்ணீர் வருதுன்னு சந்தோஷப்பட்டா அது கிராம வாழ்க்கை.



வீட்டிற்குள் தண்ணீர் வருமேன்னு பயப்பட்டா அது நகர வாழ்க்கை.


### ராஜி

"பீட்சா"என்பார்.
"பர்கர்" என்பார்.



காய்ச்சல் வந்தால் இட்லி தின்பார்.

### ஏஞ்சல்




### லட்சுமி




### விஸ்ணு

கல்யாணம் ஆகாதவனும் நிம்மதி இல்லைன்னு சொல்லுறான்.
கல்யாணம் ஆனவனும் நிம்மதி இல்லைன்னு சொல்லுறான்.



அப்போ யாருதான்டா நிம்மதியா இருக்கிறது.
டைவோர்ஸ் பண்ணவனா???

### சூசை



காதலியா இருக்குறப்போ
பாசத்த ❤ வீசுவதும்.,

மனைவியான பின்
பாத்திரத்தை வீசுவதும்
சகஜம் தான..,

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி விலகிய நீதிபதியை தொடர்பு கொள்ள முடியவில்லை

### சாலிய பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவை தொடர்பு கொள்ள முடியவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் மற்றும் இவ்விடயம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிரச்சுறுத்தல்கள் மற்றும் மிகையான அழுத்தங்கள் காரணமாகத் தனது அனைத்துப் பதவிகளிலிருந்தும் விலகுவதாக குறிப்பிட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவியை துறந்து நாட்டைவிட்டும் வெளியேறியுள்ள நிலையில், அவரைத் தொடர்புகொள்ள முற்பட்டும், அது சாத்தியமாக வில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## சீரற்ற காலநிலையால் 644 பேர் பாதிப்பு

### அனர்த்த முகாமைத்துவ நிலையம்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் 164 குடும்பங்களைச் சேர்ந்த 644 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நேற்றைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 151 குடும்பங்களைச் சேர்ந்த 594 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வெள்ளப்பெருக்கினால் 60 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 36 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

எனினும், இதுவரை காயங்களோ, உயிரிழப்புகளோ எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)


# சேவைநலன் பாராட்டு

60 அகவையில் பணி ஓய்வு பெறும்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர்
திரு.அலோசியஸ் மகேந்திரன் (SLPS-I) அவர்கள்



பிறந்த திகதி-01.10.1963
பிறந்த இடம்- வடமராட்சி நெல்லியடி
கல்விப்புலம்
ஆசிரியராக...
1.நீர்கொழும்பு/விஜயரட்ணம் இந்துக் கல்லூரி
02.06.1997-12.02.2001 வரை
2. யாழ் மத்திய கல்லூரி
13.02.2001-14.05.2013 வரை
அதிபராக
யாழ். புனித அந்தோனியார் ஆண்கள் மகா வித்தியாலயம்
15.05.2013-13.01.2016 வரை
பிரதி அதிபராக
யாழ். இந்துக் கல்லூரியில்
14.01.2016- ஓய்வு பெறும் வரை




(சி-735)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த 8 வருடங்களாக சேவையாற்றி பிரதி அதிபராக இருந்து தனது முகாமைத்துவ ஆற்றலாலும் அனுபவத்தாலும் ஆசிரியர்களை வழிப்படுத்தியும் உயர்தர வகுப்பு மாணவர்களை நெறிப்படுத்தியும் கடமைகளைச் செவ்வனே செய்து மனநிறைவுடன் ஓய்வு பெறும் எமது பிரதி அதிபரை அறுபதாவது பிறந்தநாளில் வாழ்த்துவதுடன் ஓய்வுகாலம் சிறக்கஇறைவனை வேண்டுகிறோம்.

ஆசிரியர் கழகம்,யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.


# இராசிபலன்

01.10.2023
புரட்டாதி 14, ஞாயிற்றுக்கிழமை
துதியை பிற்பகல் 12.50 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 11.29 மணிவரை

சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம்-4.32-6.02 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம்,உத்தரம்.

வளவன்

**மேஷம்:** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், கனவு பலிதமுண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்:** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்:** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**துலாம்:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய சித்தியுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே கைகூடும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்,புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அதிஷ்டகரமான நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்,பயணங்களால் பலனுண்டு.


**கும்பம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

மற்றவர்களின் மகிழ்ச்சியில் நாமும் மகிழ்ந்து கொள்ளல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தனை வழிபட்டார் கரு ஜெயசூரிய



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு வருகை தந்த துடன், அங்கு இடம்பெற்ற விசேட பூஜைகளில் கலந்து கொண்டார்.



பின்னர், யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை மத்தியஸ்தான த்தின் விகாரைக்கு சென்ற துடன் ஸ்ரீ நாகவிகாராதிபதி ஸ்ரீ விமலரத்தன தேரரை சந்தித்து கலந்துரையாடியு ள்ளார்.

இதில் வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாநகர ஆணை யாளர் வ.ஜெயசீலன் ஆகியோர் பங்கேற்றனர். (நி)

# இராணுவத்தின் ஆளணியை பாதியாக குறைக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை இராணுவ வீரர்களின் எண்ணிக் கையை 100,000 ஆக குறைக்க அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது.

தற்போது இரண்டு இலட் சத்தைத் தாண்டியிருக்கும் இராணுவத்தின் அங்கீக ரிக்கப்பட்ட பணியாளர்க ளை பாதியாகக் குறைப்பதே அரசின் இலக்கு.

2030 ஆம் ஆண் டுக்குள் இராணுவ வீரர்க ளின் எண் ணிக்கையை ஒரு இலட்சமாக குறைக்க அரசாங்கம் கொள்கை ரீதி யான தீர்மானத்தை எடு த்துள்ளதாக பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித தார்.

பொருளாதார நெருக்கடி யால் சிக்கித்தவிக்கும் இல ங்கை அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழ ங்கவே திண்டாடி வருகி றது.

அதிலிருந்து ஓரளவுக் கேனும் மீளும் வகையில் முப்படையிலிருந்து ஆளணி வளத்தை குறைக்க முடிவு செய்திருக்க லாமென தெரிவிக்கப்படுகிறது. (நி)

# 110,000 மில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை

## மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

ஒரு இலட்சத்து 10 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறும தியான திறைசேரி உண்டி யல்கள், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி ஏல விற்ப னையின் ஊடாக வழங்கப்ப டவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 55 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட் கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்க ளும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத் திய வங்கி அறிவித்துள் ளது. (நி)

# தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் 2023 ஐ முன்னிட்டு யாழ்.மாநகர சபை பொது சன நூலகத்தினால் இன்று தொடக்கம் 'உலகம் வாசிப்பவருக்கே சொந்தம்' எனும் தொனிப் பொருளில் இன்று சிறுவர் முதியோர் தின நிகழ்வுகளுடன் ஆரம் பமாகி தொடர்ந்து செயற் பாடுகள் இடம்பெறும். (நி)

மஹாபரணியை முன்னிட்டு

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளை யார் தேவஸ்தானத்தில் மஹாபரணியை முன் னிட்டு நாளை திங்கட் கிழமை மாலை 3 மணிக்கு பின்னர் வைர வப் பெருமானுக்கு அபி ஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப் பூஜை நடைபெற்று விநா யகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவே கானந்தக்குருக்கள் அறிவித் துள்ளார். (நி)

# சுழிபுரம் கமக்கார அமைப்பின் காலபோக செய்கைக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கமக்கார அமைப் பின் காலபோக நெற்செய்கைக் கான கூட்டம் நாளை திங் கட்கிழமை மாலை 3 மணிக்கு பறாளாய் வீதியில் உள்ள நாவ லர் சனசமூக நிலையக் கட்ட டத்தில் நடைபெறும்.

அன்று மானிய உரம் வழ ங்கல் மற்றும் கட்டாக்காலி ஆடு, மாடு போன்றவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராயப்படும். எனவே அனை வரும் தவறாது சமூகம் தரு மாறு சுழிபுரம் கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (நி)

# அமெரிக்க குடியுரிமையை கைவிட மறுக்கும் பசில்

(கொழும்பு)

அமெரிக்க குடியுரி மையை கைவிட தயாராக இல்லை என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்பு இதே நிலையில் தான் இருந்ததாகவும், இப் போதும் அதே நிலைப்பா ட்டில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் யார் போட்டியிடுவது என்பது இன்னும் தீர்மானிக்கப்பட வில்லை.

எனினும், கட்சியாக வேட்பாளரை முன்வைக்க வேண்டும் என்ற கருத்து கட்சிக்குள் வலுவாக வெளி ப்பட்டு வருவதாகவும், மற்ற ப்படி வேட்பாளர் யார் என பதை இன்னும் முடிவு செய் யவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (நி)


அந்தியேஷ்டி சபிண்டீகரண அழைப்பிதழ்

கடந்த 01.09.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



அமரர். தனபாலசிங்கம் சுரேஸ்குமார்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-7953)

கட்டைப்புளியடி, கொற்றாவத்தை, அல்வாய் மேற்கு.

குடும்பத்தினர்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினரும் பழைய மாண வருமான அமரர்.வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கனின் ஞாப கார்த்தமாக அவரது பெற்றோரின் நிதிப்பங்களிப்புடன் பழைய மாணவர் சங்கத்தினால் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுகாதார மேம்பாட்டு அலகு திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

(படம் : சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 409



# நீதி வேண்டி நிற்கும் நீதி!



அபிமன்யு

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது முது மொழி. இலங்கைத் திருநாட்டில் நீதி வழங்கும் நீதிமன்ற நடைமுறைகளுக்கே பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்றால் எங்கு போய் முறையிட முடியும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நீதித்துறை சுயாதீனமாக நீதி தவறாது செயற்பட்டு வருகிறது.

ஆனால் தற்போதைய இலங்கைத்திருநாட்டில் என்ன நடக்கின்றது என்றே புரியவில்லை. அந்தளவிற்கு நீதித்துறையை அரசியல் புள்ளிகள் அச்சுறுத்தும் செயல் நடந்தேறியிருக்கிறது.

இது உலக வரலாற்றில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள கறுப்புப் புள்ளி என்றே கூறிவிடமுடியும்.

ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியாய் நடக்கிறது என்றால் அங்கு நீதித்துறை திறம்பட தனது பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றது என்றே பொருள்.

ஆனால் இப்போதைய இலங்கையில் அவ்வாறு நீதித்துறை சுயாதீனமாக இயங்குகிறதா எனின் அது கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதே மக்கள் கருத்து.

ஆம், குருந்தூார் மலை விவகாரத்தில் சிங்கள பெரும்பான்மையினர் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

எப்படியாவது அதன் வரலாற்றை மாற்றியமைத்துவிட வேண்டும் என்பதில் பேரினவாத சக்திகளுடன் பிக்குகளும் கைகோர்த்திருக்கின்றனர்.

குருந்தூர் மலை விவகாரம் முல்லைத்தீவு நீதிமன்றத்தினூடாக நடைபெறும் நிலையில், குறித்த நீதிமன்ற நடவடிக்கைகளில் நீதிபதி சரவணராஜா மிக உன்னதமான பணியை ஆற்றி வந் தார் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

அந்தளவிற்கு அவரின் செயற்பாடுகள் நீதிவழி தவறாமல் இருந்தமை பெரும்பான்மை சிங்கள சக்திகளுக்கு சகிக்க முடியாத விடயமாகியது.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவை எப்படியாவது பதவியில் இருந்து நீக்கி விடவேண்டும் என்பதில் மிகத் தீவிரம் காட்டினர்.

அதற்கு அவர்கள் எடுத்த ஆயுதமே நீதித்துறை மற்றும் நீதிபதியை விமர்சிக்கும் செயற்பாடாகும்.

ஏலவே இனவாதப் போக்கை கடைப்பிடிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லை நீதிமன்ற விவகாரத்தில் தலையிடத் தொடங்கினார்.

முல்லை நீதிமன்ற நீதிபதி பக்கச்சார்பாக நடந்து கொள்கிறார். அவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டு விட்டது என்றவாறு அவர் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் தெரிவித்த கரு த்து பெரும் பேசு பொருளாக அமைநந்தது.

நீதித்துறையை விமர்சிக் கும் உரிமை இந்த நாட்டில் எவ ருக்கும் இல்லை. ஆனால் சரத் வீரசேகரவுக்கு விசேட சலுகை வழங்கப்பட்டது போல அவர் நீதித் துறையையும் நீதிபதியையும் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அக்கறை காட்டவில்லை எனின் அவரின் பேச்சுகள் அரச அனுமதியுடன் பேசப்படுகிறதோ என்ற ஐயம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

நிலை இதுவாக இருக்கையில் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜா அவர்கள் கடந்த வியாழக்கிழமை தனது பதவியைத் துறந்து வெளிநாடு சென்றுள்ளார்.

அவரின் ராஜினாமா கடிதத்தில்...

- குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில்



உயிர் அச்சுறுத்தல்.

- குருந்தூர் வழக்கின் தீர்ப்பை மாற்றி அமைக்கக் கோரி அரச தரப்பால் தொடர் அழுத்தம்.
- தனக்கான பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டமை.

என்பவற்றினால் எனது பதவியை துறந்து, நான் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதாய்த் தெரிவித் திருந்தார். ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான நீதித்துறையின் நீதிபதிக்கே இந்நிலை எனில் சாதாரண மக்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை நாம் எண் ணிப்பார்க்க வேண்டும்.

முல்லை நீதிமன்ற நீதிபதியின் பதவி துறப்பு சர்வதேச ரீதியில் இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

தவிர சுயாதீனமாக இயங்கும் நீதித்துறையின் நீதி நடவடிக்கைகள் மீது அரச தரப்பு அழுத்தம் கொடுக்கின்றது எனின் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்புகள் தொடர்பிலும் நிலையற்ற தன்மை ஏற்பட்டுள்ளதை உணரக் கூடியதாக உள்ளது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என சர்வதேசத்தில் தம்பட்டம் அடிக்கும் ஆட்சியாளர்கள், இவ்விடயத்தில் அமைதி காப்பதற்குள் இருக்கும் காரணம் என்னவென்பதை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்ற மீறல்களுக்கு சர்வதேச விசாரணை மேற்கொள்ள இடமில்லை. உள்ளக பொறிமுறை ஊடாக விசாரணை மேற்கொள்ள முடியும் எனக் கூறும் அரச தரப்பு ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது ஒரு நீதிமன்றத்தின் நீதிபதியை அழுத்தங்களினூடே பதவி விலகச் செய்தவர்களால் எவ் வாறு உள்ளக விசாரணையை மேற் கொண்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்க ளுக்கு நீதியைப் பெற்றுத் தர முடியும். அவ்வாறு அவர்கள் பெற்றுத்தரும் நீதி எந்தவகையில் உண்மையுள்ளதாய் இருக்கும்.

தமிழர் பிரதேசத்தில் தமிழ் நீதிபதி ஒருவர் பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்களினால் அச்சுறுத்தல் என தனது பதவியை துறந்தது போல தமிழர்களின் அச்சுறுத்தலால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நீதிபதி ஒருவர் பதவி விலகியிருந்தால் இன்றைய இலங்கை எவ்வாறு இருந்திருக்கும்.

இலங்கை சிங்கள், பௌத்த நாடு எனக்காட்டிக் கொள்ள பெரும்பான்மையினர் படும்பாட்டில் பாதிப் பங்கை நாட்டின் வளர்ச்சிக்கு செலுத்தினால் நாடு வளர்ந்து முன்னோக்கிச் செல்லும். உலக நாடுகளிடம் பிச்சைப்பாத்திரம் ஏந்தி திரிகிறது இலங்கைத் திருநாடு.

ஆனால் இங்கோ பௌத்த துறவிகள் தமிழர் பிரதேசங்களில் கோடி செலவில் விகாரை கட்டி மகிழ்கின்றனர்.

இதுதான் இன,மத நல்லிணக்கமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபையின் உப தலைவர் தேசகீர்த்தி சரவணமுத்து ஆறுமுகநாதன் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயரமடைகின்றோம்.

ஆன்மீகப் பணியும் சமூகப் பணியும் ஆற்றிய அவரின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச மட்டத்தில நெருக்கடிகள் ஏற்படத்தான் போகுது. அதோட இலங்கையில் ஒரு தமிழ் நீதிபதி சுயாதீனமாகத் தீர்ப்பு வழங்க முடியாத இக்கட்டான சூழ்நிலை இருக்கின்ற விடயமும் அம்பலமாகி இருக்குது.


உண்மையில நீதிபதி சரவணராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய ஒரு சம்பவம் இலங்கையின்ர நீதித்துறையை கேள்விக்குரியதாக ஆக்கியிருக்குது.

**வாத்தியார்:-** மன்னவனும் நீயோ! வளநாடும் உன்னதோ!... என்று சோழ மன்னனைப் பார்த்து கம்பன் கர்ச்சித்ததைப் படித்திருக்கிறோம்.

ஆனால், நீதி என்றால் அது நீதியாகத்தான் இருக்கும். அதில் ஆள்பவன், குடிமகன் என்ற பேதம் கிடையாது.

வழங்கிய தீர்ப்பில் எந்த மாற்றமும் செய்ய முடியாது.தீர்ப்பை மாற்றி எழுதி நீதிபதியாக இருக்க வேண்டிய தேவை எனக்கில்லை எனக் கூறித் தனது பதவியைத் தூக்கி எறிந்து, நாட்டை விட்டு வெளியேறிய நீதிபதி சரவணராஜா அவர்களுக்கு ஆலடியில பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுவம் எனக் கூற. ஆலடியில் இருந்தவர்கள் அனைவரும் எழுந்து நின்று நீதிபதி சரவணராஜாவின் நேர்மைக்கும் துணிச்சலுக்கும் கௌரவம் கொடுத்து அமர்ந்தனர்.

**சாத்திரியார்:-** நீதிபதி சரவணராஜாவின் நீதிக்கு ஆலடியில நாங்கள் கௌரவம் கொடுக்கிறம். ஆனால் இதுக்கு முன்பாகவே ஒரு



## நீதிபதி சரவணராஜாவை வணங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்

பொலிஸ் உத்தியோகத்தர் அவருக்கு கௌரவம் கொடுத்திருக்கிறார்.

**சிறாப்பர்:-** என்ன சாத்திரியார் சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கள்.

**சாத்திரியார்:-** நீதிபதி சரவணராஜா வெளிநாடு செல்வதற்காக கொழும்பு விமான நிலையத்திற்குச் சென்ற போது, அவருக்கு பாதுகாப்பாக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர். விமான நிலையத்தில வைத்து நீதிபதி சரவண ராஜாவின்ர காலைத் தொட்டு வணங்கி பிரியாவிடை கொடுத்தவராம்.

அதைப்பார்த்தவர்கள் யார்? இவர் ஏன்? அவற்றை காலைத் தொட்டு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் வணங்குகிறார் என்று நினைச்சவியளாம். பிறகு தான் சங்கதி தெரியவந்திருக்குது.

**பண்டிதர்:-** ஓ!.. நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தர்கள் எத்தனையோ பேர் இருக்கினம் தானே. அவர்களுக்கு உண்மை தெரியும்.

**விதானையார்:-** நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தது தொடர்பில பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகராவை முதலில விசாரிக்க வேணும். ஏனென்றால், அவர்தான் சரவணராஜா நீதிபதியை பாராளுமன்றத்தில வைத்து கடுமையாக விமர்சித்தவர்.

**சிறாப்பர்:-** இஞ்சே விதானையார் இந்த நாட்டில இதுகள் எதுவும் நடக்காது.

குருந்தூர்மலையில விகாரை அமைப்பதற்கு பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை நீக்கும்படி அழுத்தம் கொடுக்கிற இந்த நாட்டில நீதிக்கு எங்க இடம்.

**மூப்பர்:-** என்ன இருந்தாலும் நீதிபதியின் வெளியேற்றம் ஜனாதிபதி ரணிலின் ஆட்சியும் போக்கணம் கெட்டது என்ற உண்மையை வெளிப்படுத்தியிருக்குது. அவ்வளவுதான்.

**வாத்தியார்:-** முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலானது எங்கட அனைத்து தமிழ் நீதிபதிகளுக்குமான ஓர் எச்சரிக்கை.

ஆகையால இது விடயத்தில சர்வதேச அமைப்புகள் தலையிட்டு தமிழ் நீதிபதிகளின்ர பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேணும்.

அதோட வெளிநாடுகளில தஞ்சமடைந்துள்ள ஈழத்தமிழர்களுக்கு அந்த நாடுகள் நிரந்தர வதிவுரிமையை வழங்க வேணும்.

தமிழ் நீதிபதிக்கே உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிற இந்த நாட்டில, சாதாரண தமிழ் மக்களின்ர நிலைமை எப்படி இருக்கும் என்பதை நாங்கள் சொல்லி ஆரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இராது.

**விதானையார்:-** அது சரி, தீர்ப்பை மாற்றி எழுதச் சொல்லுகிற அளவில இலங்கையின்ர ஆட்சி அதிகாரம் இருக்குது எண்டால்.

ஏலவே தமிழ் மக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்புகள் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணப் பிரிப்புகள் எல்லாம் எப்படியான நிலைமைகளின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பாக இருக்கும் மெண்ட கேள்வி இப்ப எழுகுதல்லோ.

**வாத்தியார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். ஜனாதிபதித் தேர்தலில மகிந்த தோற்று மைத்திரி வெற்றியீட்டிய போது அப்போது பிரதம நீதியரசராகப் பதவி வகித்தவர், ஜனாதிபதி மாளிகையில மகிந்தவோட இருந்தவரல்லோ. அந்தநேரம் பதவியைத் துறக்குமாறு கேட்டு மகிந்தவைச் சந்திக்கச் சென்ற ரணில் விக்கிரமசிங்க அங்கு பிரதம நீதியரசர் இருப்பதைப் பார்த்து திகைத்துப் போனதோட. அது சரி, பிரதம நீதியரசரான உங்களுக்கு இஞ்ச என்ன அலுவல் எண்டும் கேட்ட வரல்லோ. இப்படித்தான் எல்லாம் நடக்குது.

**சிறாப்பர்:-** ஏதோ தமிழ் மக்களின்ர வாழ்வும் உரிமையும் நீதித்துறையிட்டத் தான் இருக்குது. நீதித்துறை எண்டு வந்துவிட்டால் அங்க இன ,மத, மொழி என எந்தப் பேதமும் கிடையாது.

சட்டத்தின் முன் சகலரும் சமன் அவ்வளவு தான்.

இவ்வாறு சிறாப்பர் கூறியதும் ஆலடியில அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி ஆரைக்கேட்டாலும் வெளிநாடு போகப் போறம் எண்டு சொல்லுகினம். அப்ப இனி இந்த மண்ணில முதியவர்களாகிய நாங்கள் மட்டும் தான் இருக்கிறதோ.

**சாத்திரியார்:-** வெளிநாட்டுக்குப்போற பிள்ளைகள் போகட்டும். அங்கபோய் அதுகள் உளைச்சுக் கொண்டு இஞ்ச வருவினம். எங்கட மண்ணில சிங்களப் பேரினவாதம் மட்டும் அல்ல, எங்கட தமிழ் அரசியல் தரப்புகளும் எங்களை ஏமாற்றிப் போட்டினம்.

அதோட இந்த மண்ணில இருக்கிற துறைசார் நிபுணர்களில ஒரு தரப்பினர் வித்துவக் காய்ச்சலோட தானே வேலை செய்கினம்.

அப்ப என்னெண்டு இந்த மண்ணில இருக்கிறது.

**மூப்பர்:-** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** இந்தாப் பாருங்க. யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில குழந்தைப் பிள்ளைகளின்ர வாட்டில கனுலா போடுறதுக்கு தாதியர்கள் பின்னடிக்கினமாம்.

இதனால மற்றைய வாட்டுகளில இருக்கிற தாதியர்களைக் கெஞ்சி மண்டாடித் தான் குழந்தைகளுக்கு கனுலா போட வேண்டி இருக்குது.

**பண்டிதர்:-** எல்லாரையும் எல்லாரும் மதிக்க வேணும். நான் பெரியவன். நீ சிறியவன் எண்டு காட்ட வெளிக்கிட்டால் எல்லாம் அம்போ தான்.

இவ்வாறு பண்டிதர் கூற,அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்:சுமைதாங்கி
இயற்றியவர்:கண்ணதாசன்
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்: P.B.ஸ்ரீநிவாஸ்



மயக்கமா கலக்கமா
மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா
மயக்கமா கலக்கமா

மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா
வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்

வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
வாடி நின்றால் ஓடுவதில்லை

எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி இருக்கும்

மயக்கமா கலக்கமா
மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா

ஏழை மனதை மாளிகையாக்கி
இரவும் பகலும் காவியம் பாடி
நாளை பொழுதை இறைவனுக்களித்து

நடக்கும் வாழ்வில் அமைதியை தேடு
நடக்கும் வாழ்வில் அமைதியை தேடு
உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்து பார்த்து நிம்மதி நாடு

மயக்கமா கலக்கமா
மனதிலே குழப்பமா
வாழ்க்கையில் நடுக்கமா

# உலகக் கோப்பை சுவாரசியங்கள்

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் கிரிக்கெட் உலகக்கோப்பை எனும் அற்புதத்தைக் காண உலகமே தயாராகி வருகிறது. வரும் ஒக்டோபர் 5 முதல் நவம்பர் 19 வரை நடைபெறும் போட்டிகள் இந்திய மைதானங்களில் நம் கண்களுக்கு விருந்தாகப் போகின்றன. சம்பியன் பட்டத்தை யார் வெல்வார் என்பதை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்காக வேர்ல்ட் கப்-பின் சில அரிதான கோல்டன் மெமரீஸ் இங்கே...

## லேடீஸ் ஃபர்ஸ்ட்!

வியப்பாக இருந்தாலும் ஆண்கள் உலகக்கோப்பை ஆரம்பமாவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே 1973 இல் மகளிர் உலகக்கோப்பை இங்கிலாந்தில் விளையாடப்பட்டது. வெளியேற்றும் சுற்றுகள் எதுவும் இல்லாமல் தொடரில் அதிக போட்டிகளில் வெற்றி பெற்றதன் அடிப்படையில் இங்கிலாந்து அணி கோப்பை வென்றது. இரண்டாவது மகளிர் உலகக் கோப்பைத் தொடர் 1978 இல் இந்தியாவில் நடைபெற்றது. ஆண்களுக்கான உலகக்கோப்பையை 1987இல் தான் இந்தியா நடத்தியது.

## வெள்ளை டூ வண்ணம்!

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் 1992இல் நடைபெற்ற உலகக் கோப்பைத் தொடரில் பல புதுமைகள் அறிமுகமாகின. அதுவரை வெள்ளை உடையில் ஒருநாள் போட்டிகளை விளையாடிய வீரர்கள் வண்ண உடைகளுக்கு மாறினார்கள். அழகான மைதானங்கள், வெள்ளைப் பந்து, பகல்-இரவு ஆட்டங்கள், ரீப்ளே போர்டுகள், ஸ்டம்ப் விஷன் கமரா, புதிய கிரிக்கெட் விதிமுறைகள் எனப் பரிணாமம் பெற்றிருந்தது ஆட்டம்.

## மிக்ஸ்டு டபுள்ஸ்!

எந்தவொரு விளையாட்டிலும் தனது சொந்த நாட்டுக்காக விளையாடுவதுதான் விளையாட்டு வீரருக்கும் பெருமை சேர்க்கும். ஆனால், 2007 உலகக் கோப்பையில் எட் ஜாய்ஸ் இங்கிலாந்துக்காகவும் இயான் மோர்கன் அயர்லாந்துக்காகவும் விளையாடினர். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 2011 உலகக் கோப்பையில் இயான் மோர்கன் இங்கிலாந்துக்காகவும் எட் ஜாய்ஸ் அயர்லாந்துக்காகவும் விளையாடியுள்ளனர். அயர்லாந்திலுள்ள டப்ளின் நகரத்தில் தான் இவர்கள் இருவரும் பிறந்துள்ளார்கள்.

## அப்பாவும் பிள்ளையும்!

தந்தை டான் பிரிங்கிள் மற்றும் மகன் டெரெக் பிரிங்கிள் இருவரும் வெவ்வேறு உலகக் கோப்பைகளில் இரண்டு வெவ்வேறு நாடுகளுக்காக விளையாடிய பெருமைக்குரியவர்கள். அப்பா டான் 1975 போட்டியில் கிழக்கு ஆபிரிக்காவிற்காக இரண்டு போட்டிகளில் விளையாடினார். மகன் டெரெக் 1987 மற்றும் 1992 உலகக் கோப்பைகளில் இங்கிலாந்துக்காக மொத்தம் பதினொரு போட்டிகளை விளையாடியுள்ளார்.

## மினிமம் எஃபர்ட், மேக்சிமம் ரிசல்ட்!

உலகக் கோப்பையில் ஒரு போட்டியில்கூட விளையாடாமல் உலகக் கோப்பையை வென்ற ஒரே கிரிக்கெட் வீரர் சுனில் வால்சன். இடக்கை மிதவேகப் பந்துவீச்சாளரான சுனில் 1983இல் கோப்பை வென்ற இந்தியாவின் 14 பேர் கொண்ட அணியில் ஒருவராக இருந்தார். சர்வதேசப் போட்டியிலும் அறிமுகமாகவில்லை. இந்தத் தொடருக்குப் பிறகு வேறெந்தப் போட்டிக்கும் தேர்வாகவுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூழலுக்கு தீங்கான பொலித்தீன்களை சேதனப் பசளை ஆக்கும் கண்டுபிடிப்பு காலத்தின் தேவையல்லவா வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**ஆளுநரின் தடை உத்தரவை மீறி திருமலையில் விகாரை அமைக்கப்படுகிறதாமே?**

இலங்கை உலக நாடுகளிடம் பிச்சை கேட்டுத்திரிகிறது. ஆனால் இங்கு பிக்குமார் விகாரைகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
இதைத்தான் குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் என்பார்கள்.
நீதிபதிக்கே அச்சுறுத்தல் விடுத்து அவரைப் பதவி விலகச் செய்தவர்களிடம் மனிதம் இருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?
ஒரு நாளும் இல்லை. அன்பு, கருணை என்பவற்றை போதித்த புத்தன் வழி வந்தவர்களிடம் அது இம்மியும் இல்லை என்பதே உண்மை.

**சுரேசன் — பத்தமேனி**

**சூழலுக்கு தீங்கான பொலித்தீன் களை சேதனப் பசளை ஆக்கும் கண்டு பிடிப்பு காலத்தின் தேவையல்லவா வியாசரே?**

பொலித்தீன் உலக அழிவுக்கான அரக்கன். பூமியை சுடுகாடாக்கவல்ல பொலித்தீன் பாவனையை மனிதன் இல்லாதொழிக்க வேண்டும்.
அவ்வாறு செய்தால் மாத்திரமே இந்த உலகம் அழிவில் இருந்து தவறும்.
அந்தளவிற்கு பொலித்தீன் பூமியை சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறது.
பொலித்தீனில் இருந்து சேதனப் பசளை என்ற பேச்சுக்கே இடமில்லை.
அது அரக்கன். அந்த அரக்கனை உலகில் இருந்து அழிக்க வேண்டியது எமது கடமை. அவ்வளவே.

**துசன் — யாழ்ப்பாணம்**

**ரஜினியின் ஜெயிலர் படம் பார்த்தீர்களா வியாசரே.படம் எப்படி?**

தர்பார், அண்ணாத்த தோல்விக்குப்பின் எப்படியாவது ஒரு வெற்றியைக் கொடுத்துவிட வேண்டும் என ரஜினி விரும்பினார்.
பீஸ்ட் தோல்வியிலிருந்து மீண்டெழ வேண்டும் என நெல்சன் கடும் பிரயத்தனம் செய்தார்.
இரண்டு பேரின் கடும் உழைப்பு மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்தது.
ரஜினியின் வயதிற்கு ஏற்ற கதாபாத்திரம். அவரின் நடிப்பு உச்சம். நெல்சனின் தொய்வில்லாத திரைக்கதை. அனிருத்தின் அருமையான இசையமைப்பு. இவை அனைத்தும் பிரமாதமாகப் பொருந்த ஜெயிலர் வெற்றி வாகை சூடியது.
ரஜினி தோல்வியிலிருந்து மீண்டெழுந்து புதிய உத்வேகத்துடன் உள்ளார்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சங்கரசிவன் — வதிரி**

**13 ஐ அமுல்படுத்தச் சொல்லும் சந்திரிகா அம்மையார் தனது ஆட்சிக் காலத்தில் அதைச் செயற்படுத்தாதது ஏன் வியாசரே?**

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்று நடைபெற்றிருந்தது.
விடுதலைப் புலிகளின் ஈழக் கோரிக்கைக்குப் பின் இலங்கை அரசுடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சமாதானப் பேச்சுவார்த்தையும் அதுவே.
ஆயினும் அந்தப் பேச்சுவார்த்தை முற்றுப் பெறவில்லை.
குறித்த பேச்சுவார்த்தைக் காலமே விடுதலைப் புலிகள் பலமிழக்கும் காலமாகவும் அமைந்திருந்தது.
கருணா அம்மான் பிரிவு விடுதலைப் புலிகளின் கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது உண்மை.
அம்மையாரின் சிந்தனை சுடலை ஞானம் என்பது போலத்தான்.



நீதிபதியே தனக்கு அச்சுறுத்தல் என நாட்டைவிட்டு வெளியேறும் சந்தர்ப்பம் இலங்கையில் எப்படிப்பட்டது வியாசரே?

**திகான் — வடமராட்சி**

**மாடுகளுக்கு சுத்தமான நீர், பசும்புல் என்பன அவசியமல்லவா வியாசரே?**

வன்னிப் பெருநிலப்பரப்பில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் பேரினவாத சக்திகளினால் சுவீகரிக்கப்பட்டுவிட்டன.
அதனால் மாடுகள் மேய்ச்சல் தரையின்றி அலைகின்றன. பண்ணையாளர்கள் என்ன செய்வது எனத் தெரியாமல் திகைத்து நிற்கின்றனர்.
இதற்கு நடுவே வறட்சியும் வாட்டத் தொடங்கிவிட்டது.
அனைத்து குளம் குட்டைகளும் வற்றிப் போய்விட குடிக்க நீர் இன்றி கால்நடைகள் தவித்து நிற்கின்றன.
இதில் அதிகம் பாதிக்கப்பட்டது நெடுந்தீவு குதிரைகளே.
கடும் வறட்சி குதிரைகளுக்கு குடிக்க நீரின்றி குட்டைகள் வற்றிவிட அவை வயிறு ஒட்டி இறந்து போகும் சோகம் இன்றுவரை நடந்து கொண்டே இருக்கிறது.

**மகாலட்சுமி — கொக்குவில்**

**தங்கமலை இரகசியம் என்றால் என்ன வியாசரே?**

தங்கமலை ரகசியம் என்பது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த திரைப்படம்.இத்திரைப்படத்தில் அமுதைப் பொழியும் நிலவே நீ அருகில் வராததேனோ.. எனும் அருமையான பாடலும் உண்டு.அதைவிட இப்போது விடுதலைப்புலிகளின் தங்க புதையல் தேடி தோண்டப்படும் விடயம் பற்றி நன்றாகத் தெரியுமே.
இந்தத் தங்கப் புதையல் இரகசியம் தான் என்ன ஏதென்றுபுரியவில்லை.
தோண்டத் தோண்ட எதுவும் கிடைப்பதாய் தெரியவில்லையே.


**சுதன் — துப்பிழான்**

**நீதிபதியே தனக்கு அச்சுறுத்தல் என நாட்டைவிட்டு வெளியேறும் சந்தர்ப்பம் இலங்கையில் எப்படிப்பட்டது வியாசரே?**

ஒரு நீதிபதிக்கே இவ்வாறான நிலை என்றால் சாதாரண தமிழ் மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்.
கடவுளே நினைக்கவே நெஞ்சம் பதை பதைக்கிறது.
சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் நீதிமன்றையும் நீதிபதியையும் விமர்சிக்கும் போது அரசு பேச்சின்றி இருப்பதற்குள் இருக்கும்பொருள் இப்போது விளங்குகின்றது.
இது சிங்கள-பௌத்த நாடு. இங்கு அவர்களுக்கு சட்டம் ஒரு மாதிரியும் மற்றவர்களுக்கு சட்டம் வேறு ஒரு மாதிரியும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது.
இவர்கள் தான் உள்ளக விசாரணை செய்து தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுத்தரப் போகிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதும் கண்ணீர்; என்ன பிரச்சினை



எப்போதும் உங்கள் கண்களில் கண்ணீர் கசியத் தயாராக இருக்கிறதா? அதை உங்கள் பலவீனமாக நினைக்க வேண்டாம். மருத்துவ ரீதியாக அதற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். கண்ணீர் கசிந்துகொண்டே இருப்பதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் விளக்குகிறார் விழித்திரை சிறப்பு மருத்துவர் வசுமதி வேதாந்தம்.

"இடைவிடாத கண்ணீர்க் கசிவுக்கு முதலும் முக்கியமுமான காரணம் கண்களின் வறட்சி. கண்கள் வறண்டு போவதால் 'லாக்ரிமல் கிளாண்டு' (Lacrimal Gland) எனும் கண்ணீர் சுரப்பி இன்னும் அதிகமாக வேலை செய்யும். கண்ணீரின் தரம் சரியில்லாத போதுதான் அது வெளியே கொட்டும். கண் இமைகளைச் சுற்றியுள்ள தசைகள் சரியாக வேலை செய்யாவிட்டாலும் கண்ணீர் கசியலாம்.

கண்களையும் மூக்கையும் இணைக்கும் ஒரு குழாய்தான் கண்ணீரை இறுகச்செய்யும். இந்தச் செயல் நடைபெறாதபட்சத்தில், கண்ணீர் வெளியே கொட்டும். கண்களின் கீழ் இமைகள் உள்பக்கமோ, வெளிப்பக்கமோ சுருங்கியிருந்தாலோ, கண்களே ஓரளவு உள்ளடங்கி இருந்தாலோகூட கண்ணீர் கொட்டும்.

கண் இமைகள் வெளிப்பக்கமாகச் சுருங்கியிருக்கும் நிலையை 'எக்ட்ரோப்பியான்' (Ectropion) என்றும் உள் பக்கமாக மடங்கியிருக்கும் நிலையை, 'என்ட்ரோப்பியான்' (Entropion) என்றும் சொல்கிறோம். இவை தவிர 'ட்ரிகியாசிஸ்' (Trichiasis) என்றொரு நிலையும் உண்டு. இமைகள் சரியாக வளராமல், உள்பக்கம் திரும்பியிருக்கும் போது விழித்திரை உறுத்தலுக்குள்ளாகி, அதன் விளைவாக கண்ணீர் கொட்டும் நிலை இது.

ஒவ்வாமை காரணமாகவும் சிலருக்கு கண்ணீர் கசிந்துகொண்டே இருக்கலாம். சிலருக்கு ஏ.சியில் இருக்கும்போது கண்கள் அளவுக்கதிகமாக வறட்சியடைவதால் கண்ணீர் கசியும். வெளிச்சத்தைப் பார்த்து கண்ணீர் கொட்டினாலோ, சூரியஒளி அல்லது சக்தி வாய்ந்த ஒளியைப் பார்க்கிறபோது கண்ணீர் கசிந்தாலோ கூடவே கண்கள் சிவந்திருந்தாலோ அவற்றை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக கவனிக்க வேண்டும்.

அதிகமாக கணினி பயன்படுத்துவோர், கண்களுக்கு ஓய்வே இல்லாமல் உழைப்போர் போன்றோருக்கு கண்களில் வறட்சி ஏற்படுவது இயல்பு. இதை 'டிரை ஐ சிண்ட்ரோம்' (Dry Eye Syndrome) என்கிறோம். கண் மருத்துவர் இதை உறுதிசெய்து, கண்ணீருக்கு இதுதான் காரணம் எனக் கண்டறிந்தால் கண்களுக்கான பிரத்யேகப் பயிற்சிகளைக் கற்றுத் தருவார். தேவைப்பட்டால் வறட்சியைப் போக்கும் ஐ டிராப்ஸையும் பரிந்துரைப்பார்.

அலர்ஜியின் காரணமாக ஏற்பட்ட கண்ணீர்க் கசிவு என்றால் முதலில் அலர்ஜிக்கான காரணம் கண்டறியப்பட்டு, அதற்கான சிகிச்சைகள் பரிந்துரைக்கப்படும். ஒவ்வாமையை ஏற்படுத்தும் விடயங்களிலிருந்து விலகியிருக்கவும் அறிவுறுத்தப்படும்.

தமிழினத்திடம் இருக்கும் மிகப் பெரிய பலவீனம் மற்றவரை மதிக்காத போக்கு, தமிழினத்திற்கு இன்று வரை விமோசனம் கிடைக்காததற்கான காரணமும் அதுவே.

எங்கும் எதிலும் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற ஆதிக்கச் செருக்கு, தமிழினத்தின் வளர்ச்சியை தடுத்து நிற்கிறது என்பதே மெய்.

இதில் கற்றறிந்த கணவான்களே அதிகம் எனலாம். அரச சேவையில் உயர் பதவியில் இருப்பவர் முதல் சாதாரண பதவியில் உள்ளவர் வரை தம்மிடம் சேவை பெற வந்திருப்பவர்களுக்கு எதுவுமே தெரியாது எனும் தோரணையில் பேசுவதுதான் இன்றைய பாசன்.

குறிப்பிட்ட சேவை பெறுநர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்றுகூட அறிய முற்படுவதில்லை.

அவர்களை எடுத்தெறிந்து பேசுவது, மடக்கி கதைப்பது, தாழ்த்தி யோசிப்பது, முகபாவங்களில் வேண்டா வெறுப்பைக் காட்டுவது என அவர்களின் அநியாயத்தை சொல்லி மாளாது.

அடசீ... ஏன் இங்கு வந்தோம் எனும் அளவில் வந்தவர்கள் திரும்பி செல்லும் நிலையே இன்றையை நிலை.

பதவியில் இருப்பவர்களிடம் பொதுமக்கள் வருகின்றார்கள் எனில் அவர்கள் ஏதோ பிரச்சினையில் வருகின்றார்கள் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைவிட அவர்களின் பிரச்சினை என்ன என்பதை அவர்களைப் பேச விட்டு கேட்டறிய வேண்டும்.

அதன்பின் அதற்கு அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை கூறி தெளிவுபடுத்த வேண்டும்.

அதைவிடுத்து அவர்களின் மனம் கோண நடப்பது மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தும்.

முன்னைய காலங்களில் அரசர்கள் நாட்டு மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்ள மாறுவேடத்தில் ஊருக்குள் சென்று அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொண்டார்கள். அதற்குத் தீர்வையும் பெற்றுத் தந்தார்கள்.

ஆனால் இன்று குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு மக்களுக்கு சேவை செய்ய முற்படுவது எந்த வகையிலும் நன்மை தராது. இதை நாம் இங்கு கூறும் போது மக்களுக்கு சேவை செய்யும் பல நல்ல அதிகாரிகளுக்கு மனக்கவலையைத் தரும். இது அவர்களுக்கானதல்ல. மக்களுக்கு சரியான சேவையை வழங்காமல் எடுத்தெறிந்து பேசி அவர்களை சங்கடத்துக்கு உள்ளாக்குபவர்களுக்கு மாத்திரமே இது.

அண்மையில் ஓர் அரச அலுவலகத்திற்கு செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது.

"பதவியில இருக்கிற ஆக்கள் பிரச்சினையைச் சொல்ல வந்தால் அதைக் கேக்க வேணும். அதை விட்டுட்டு கடிநாய் மாதிரி கத்துறதும் கடிதம் எழுதுங்கோ, பொதுப் பிரச்சினையை உங்கட கையில எடுக்காதையுங்கோ, அதைப் பாக்க நாங்கள் இருக்கிறம். உங்கட பிரச்சினை என்னவோ அதை எழுதித் தாங்கோ நாங்கள் பாக்கிறமாம் எண்டு சொல்லுகினம்" பாப்பினம் பாத்துக் கிழிப்பினம் என ஒரு பெரியவர் பேசிக் கொண்டு சென்றார்.

மக்கள் வரிப்பணத்தில் ஊதியம் பெறும் மக்கள் சேவகர்களின் மகத்துவம் உன்னதமானது. அதை ஒரு சிலர் நளினப்படுத்தினால் அது ஒட்டுமொத்தப் பேரையும் இழிவுபடுத்தும் என்பதை புரிய வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் எல்லாம் சரியாய் நடக்கும்.


# மக்கள் சேவையே மகேசன் சேவை



மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழின் பெருமை



நவதானியங்கள் அருள் சுரக்க
எண்டிசையும் புகழ் பரப்ப
ஏழிசையும் சுரம் இசைக்க
ஆறு சுவையும் பலம் கொள்ள
ஐந்நிலமும் பொருள் விளங்க
நால் வகை காற்றும் நலம் பாட
முத்தமிழும் முரசொலிக்க
இரு வாழ்க்கையும் உள்ளும்
புறமுமாய் வாழ
ஒன்றே உயிரினும் மேலான ஒழுக்கமாம்
ஓங்கி ஒலித்திடும் மனிதத்தில் என்றும்

தியா,யாழ்ப்பாணம்.

## சிறுவர் தினம்

உந்தன் இதழ் பேசும் மழலை
மொழியிலே அனைத்தையும் மறந்தேனே!
நீ கொஞ்சி விளையாடும் போது என்
வாழ்க்கையில் அனைத்தும் கிடைத்தது போன்ற
உணர்வு தோன்றுதே!
நீ தத்தி தத்தி நடக்கையிலே பித்தாகி போனேனே!
உந்தன் பாடசாலை வைபவத்திலே
நீ நடத்திய நாடகத்தை கண்டு
உலகத்தையே உனது காலடியில் சமர்ப்பித்தேனே!



சி.ராகவி

## ஞான விழிப்பு

குருவோடு வாழ்வது பெருமை- அந்த
திருவோடு வாழ்வதே
வாழ்வினில்மகிமை
அருளோடுநிறைகண்டால் ஞானம்-உண்மை
பொருளோடு வழி கண்டு நிற்பதே வேதம்
நெஞ்சார்ந்த நெறியோடு நில்லு - வாழ்வில்
அஞ்சாமை ஒளியேற்று ஞாலத்தை வெல்லு

கை நிறைய கொண்டு வந்தாரா -எவர்
கை நிறைத்துக் கொண்டு
சாவினை வென்றார்
கை காட்டிப் போவோரை தாங்கு - நட்பு
கை தவறிப்போகாமல்நிறைவோடு தூங்கு
அன்பென்ற பாதையை நீ நாடு-இன்னம்
அடுத்தவரை நிந்தித்தால்
உனக்கே அது கேடு

கரையேற வேண்டியது மனிதம்-அந்த
கரை தேடிப் போனவர்கள் தந்ததே புனிதம்
நிகழ்காலம் என்பதே வாழ்க்கை-அதை
நிறைவாக்கி நிற்பதே
ஞானத்தின் சேர்க்கை
வாழ்க்கையில் முக்காலம்
இல்லை -மனிதர்
வாழ்வாங்கு வாழ்வதில் ஏதிங்கு
தொல்லை

கண்விழித்துக் காண்பதெல்லாம் காட்சி-
அக கண்களால் தேடினால்
ஒளிர்ந்திடும் மாட்சி
சிந்தனை சிறப்பிற்கு தடையா -மின்னும்
சிற்பியின் நோக்கத்தில் இல்லாத விடையா
அறிவாற்றல் என்பது சிறப்பு - இன்னும்
அறியாமை இருளென்றால் நீதானே
பொறுப்பு

அ.ஆனந்தன் ,வயவை

## மௌனத்தின் தேடல்- 688




## வாக்கும் வாழ்வும்

சுதந்திரம் சமத்துவத்துடன்
அருகி வரும் சகோதரத்துவமும்
பிரான்சியப் புரட்சியின்
குழந்தைகள்
இதில் சுதந்திரமானது
நிலையான
பிறப்புரிமை என்றும்
மனித உரிமைகளுக்கென்றும்
அடிப்படையானதென்றும்
கருதப்பட்டாலும் கூட
வெற்றி பெற்ற பின்னர்
தேர்தல் வாக்குறுதிகள்
மிதிபட்டு வதைபடுகின்றது

க.நாகராசா,நுணாவில்

## மௌனத்தின் தேடல்- 689



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## உண்மைகள் வெளிவருமா?

மனித உரிமைகளை
மதிக்காமல்
மீறிடும் செயல்கள் அனைத்துமே
சனநாயக விரோத
குற்றவியல்
செயல்கள் அல்லவா?

தங்கத்தமிழன் ,
காரைநகர்.

## கொடுமை

மதிக்கப்பட வேண்டிய மனித
உரிமைகள்
அரக்கர்களினால் மிதிக்கப்படும் போது
அதனை தட்டிக் கேட்க யாருமிலர்
மனிதம் உள்ள யாரோ ஒருவன்
அதனைக் காப்பாற்றத் துடிக்கையில்
அவனை தடுத்து இழுத்தெறியும்
ஈனர்களின் கொடுமையே கொடுமை
அதிலும் நம் மத்தியில் அவர்களும்
வாழ்ந்து கொண்டிருப்பது
கொடுமையிலும் கொடுமை

பிரேமதியா ,
யாழ்ப்பாணம்

## எவர்க்குரைப்போம்

சுதந்திரம் என்றும்
ஜனநாயக மென்றும்
நாடு நாடாய் உலா வந்து
கதையளக்கும் ஆட்சியர்
சொந்த நாட்டு மக்களின்
உரிமைகளை காலால்
மிதித்து
அவர்கள்ள துன்புறுத்துவதை
எங்கு போய்
முறையிடுவது

சி.இ . அன்புதுரை ,மானிப்பாய்.

## பிரபஞ்சம்

ஒவ்வொரு ஜீவராசியும் இம்மண்ணில்
நசியுண்டு போகாமல் சுதந்திரமாய் வீசும்
காற்று தனை அழகாக சுவாசித்து
தத்தமது உரிமையோடு வாழ்வதற்கே
இறைவனால் படைக்கப்பட்ட
இப்பிரபஞ்சம் எனும் பூகோளம்

சி. மகாலட்சுமி ,கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல்புறா

## சதுரங்க காய்கள்

மெள்ள மெள்ள அவனுக்கு உண்மை புரியலாயிற்று. இருப்பினும் உள்ளம் அறிந்ததை உதடுகளின் மூலம் உதிர்க்கவில்லை அவன். அவளே சொல்லட்டும் என்ற நினைப்பில், "எனக்கு வேறுபாடு எதுவும் தெரியவில்லையே மஞ்சளழகி" என்று கூறினான்.

"நேற்று பார்த்த முகத்தையா இன்று பார்க்கிறீர்கள்" என்று அவள் கேட்டாள் மீண்டும்.

"ஆம்" என்றான் அவன்.

"இல்லை, இல்லை, பொய் சொல்கிறீர்கள். முகம் மனத்தின் கண்ணாடி. என் மனம் பெரிதும் மாறியிருக்கிறது. முகம் மட்டும் எப்படி மாறாதிருக்க முடியும்? நேற்றுவரை நான் ஒரு சுதந்திரப் பறவை. யாருக்கும் அஞ்சாமல், உள்ளத்தில் களங்கமில்லாமல் இஷ்டப்படி இந்தக் கடற்கரையில் பறந்து கொண்டிருந்தேன். இன்று அந்த நிலை இல்லை. என் வாழ்வின் போக்கு மாறிவிட்டது. மனம் மாறி விட்டது. புத்திகூட சரியாயில்லை. ஒன்று தெரியுமா உங்களுக்கு?"

"என்ன மஞ்சளழகி?"

"இன்றுவரை நான் தனிமையை நாடியதில்லை"

"பின்?"

"கடலில் மற்றக் கொள்ளைக்காரருடன் நானும் நீந்துவேன். இந்த மறைவிடத்துக்கே நான் வந்ததில்லை. இன்று மறைவை நாடுகிறேன். தனிமையை நாடுகிறேன். உலகத்திலிருந்து, ஏன் உங்களிடம்கூட விலகச் சொல்லி ஏதோ ஒன்று என்னை எச்சரிக்கிறது."

இளையபல்லவன் அவன் கைகளிலொன்றைத் தன் கைக்குள் சிறைப்படுத்திக் கொண்டு, "வீண் பிரமை மஞ்சளழகி! இல்லாததையெல்லாம் கற்பனை செய்யாதே" என்றான்.

மஞ்சளழகி சொன்னாள் "கற்பனை எது? உண்மை எது? நேற்றை உண்மையாயிருக்கிறது இன்று கற்பனையானது. இன்று உண்மையாகத் தோன்றுகிறது நாளை கற்பனையாகலாம்."

"என்ன புதிர் போடுகிறாய்?"

"புதிரல்ல, உண்மைதான்."

"எது உண்மை?"

"நேற்று உண்மையென நினைத்தது இன்று கற்பனையாவது." என்ற மஞ்சளழகி, "விளங்கச் சொன்னாலொழிய உங்களுக்குப் புரியாது. நேற்று வரை நான் இந்தக் கோட்டைத் தலைவர்தான் என் தந்தை என்று நினைத்திருந்தேன். அது இன்று கற்பனையாகிவிட்டது. நேற்று வரை என் சுதந்திரம் நிரந்தரம் என்று எண்ணியிருந்தேன். அதுவும் இன்று கற்பனையாகி விட்டது." என்று சொன்னாள்.

இளையபல்லவன் அவள் கையைத் திடீரென வலிக்கும்படி இறுக்கப் பிடித்தான். அவள் திடீரென வெளியிட்ட அந்தச் செய்தியால் ஓரளவு திகைப்பும் எய்தினான். "என்ன என்ன! நீ பலவர்மன் புதல்வியில்லையா"

கையை அவன் அப்படித் திடீரென நெறித்துப் பிடித்தது அவளுக்கு வலிக்கத்தான் செய்தது. ஆனால் மனவலியை விட அந்த வலி ஒரு பிரமாதமல்லவென்று எண்ணிய மஞ்சளழகி, "இல்லை, நான் அவர் மகளல்ல, அது கனவாகிவிட்டது." என்றாள்.

"பின் யார் மகள் நீ?" இளையபல்லவன் கேள்வி மீண்டும் எழுந்தது சற்றே பெருந்த குரலில்.

"எனக்குத் தெரியாது."

"பலவர்மனுக்கு"

"தெரியும். சொல்ல மறுக்கிறார்."

"காரணம் இந்த நாட்டைப் பற்றியதாம்."

"இருக்காது, இருக்காது."

"கண்டிப்பாய் இருக்கும்."

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 25

## ஓ, எந்திர மனிதனே

அதிகாலையில் தென்னங்கீற்றுகளின் இடுக்கில் நுழைந்து வரும் சூரிய ஒளி.

இவைகளையெல்லாம் தரிசிப்பதற்கு உன் கண்களுக்குக் கற்றுக்கொடு எந்திர மனிதனே!

தவறாகப் புரிந்து வைத்திருக்கிறாய் நீ! சொர்க்கம் என்பது சுவரொட்டிகளில் இல்லை. உன்னைச் சுற்றியுமிருக்கிறது.

போர்க்களத்தில் பள்ளத்தில் பதுங்கியிருக்கும் படைவீரன் கூடத்தன் காலடியில் மிதிபடும்



பூக்களைக் கண்டு கொஞ்சம் புளகிப்பானே அப்படித்தான் அது. நம்மை அமிழ்த்தும் நிகழ்கால நிமிஷங்களிலிருந்து நம் புலன்களைக் கொஞ்சம் புதுப்பித்துக் கொள்வதற்கான ஏற்பாடு இது.

இயற்கையின் மடியில் நீ இளைப்பாறக் கற்றுக் கொண்டால் வேறெந்த வஸ்துகளிலும் உன்னை இழக்க வேண்டியிருக்காது. வருத்தமாயிருக்கிறது.

போகிற போக்கைப் பார்த்தால் நம் இளைஞன் இனி பூக்களில் கூடச் சதை வழிகிறதா என்று கவனிப்பான் போலிருக்கிறது.

எந்திர மனிதனே! புலன்களைப் புனிதப்படுத்து. இயற்கையை நேசி இயற்கையை சுவாசி.

கண் திறக்கும் உன் குழந்தைகளுக்கு எழுத்துகளுக்கு முன்னால் இயற்கையைச் சொல்லிக் கொடு.

**இவர்களாய்ப் பிறப்பேனா?**

**கலீல் ஜிப்ரான்**

எனக்கொரு ரகசியம் தெரிந்தாக வேண்டும். அந்த லெபனான் மண்ணில் வீசும் காற்றில் ஒரு வேளை கவிதை கலந்திருக்கிறதா?

அந்தப் பைன் மரங்களின் இலைகளிலெல்லாம் கவிதை எழுதப்பட்டிருக்கிறதா?

லெபனானின் பள்ளத்தாக்குகள் எல்லாம் கற்பனையின் கிடங்குகளா? எனக்குத் தெரிந்தாக வேண்டும்.

அவனாய் அந்தக் கலீல் ஜிப்ரானாய் - நான் பிறப்பெடுத்திருந்தால் அறிந்து கொள்வேன் அதை.

அவனமர்ந்த பாறைகளில், அவனமர்ந்த குன்றுகளில், அவனாய் நானாக ஆசை. அவனது காதலியின் கல்லறையில் இப்படித்தான் புலம்புவேன்.

"நீ இறந்த பிறகும் இருந்து கொண்டிருக்கிறாய். நான் இருக்கும் போதே இறந்து விட்டேனே"

**கார்ல் மார்க்ஸ்.**

மானுடத்தை நிமிர்த்திய அந்த மாமனிதனின் உள்ளுரத்தை மாறாத மானுட நேசத்தை நெஞ்சுக்குள் கனன்ற நெருப்பாவேசத்தை, மனித குலத்தின் பயணத்தையே திசைமாற்றிவிட்ட தீரத்தை உற்றறியத்தான் முடியுமே தவிர உணர முடியாது. அவனாய் நானிருந்தால் மட்டுமே அது சாத்தியம்.

தன் குழந்தை, தன் மனைவி ஜென்னியின் மார்பில் பாலையும் துக்கத்தையும் சேர்த்துப் பருகிய போதும் கட்டுரைகளை அனுப்பக் காலணிகளை விற்க நேர்ந்த போதும் வறுமை அவன் உடம்பிலேயே உட்கார்ந்து உதிரமுறிஞ்சிய போதும் மாறாத உறுதியோடு மனித குலத்துக்கே சாகாத சாசனத்தையல்லவா அவன் தயாரித்துக் கொடுத்தான்?

என் மனம் அந்த திறம் பெறுமா? அவனாய் நானிருந்தால் மட்டுமே அது சாத்தியம்.

**பகத் சிங்**

வருகின்ற மரணத்தை ஏற்றுக் கொள்ளவே நெஞ்சுரம் வேண்டும். மரணத்தை வாவென்று அழைக்க எத்தனை நெஞ்சுரம் வேண்டும். தொங்கிய தூக்குக் கயிற்றிலும் கூட அவனுக்கு இந்திய தேசப்படமல்லவா தெரிந்திருக்கும்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

367

வலம்புரியின் மருத்துவச்சுடர்

(சென்றவார தொடர்ச்சி...)

# கருத்தரிப்பதற்கு முன் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்கள்

கர்ப்பிணிகளில் நான்கில் அல்லது ஐந்தில் ஒருவருக்கு ஏதேனும் ஒரு வகையான நீரிழிவு நோய் காணப்படுகின்றது. ஆகவே, கருத்தரிக்கும் போது, ஒரு பெண்ணின் Blood sugar level ஆனது கருவின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியமான குழந்தைக்கும் மிக மிக முக்கியமானதாகும். கருத்தரிக்கும் போது அவருடைய Blood sugar level மிகவும் அதிகமாக இருந்தால், ஒரு குறைபாடுடைய குழந்தை கூட பிறக்க வாய்ப்புண்டு. ஆகவே, Blood sugar level கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதா என அவதானிக்க வேண்டும். எல்லா பரிசோதனைகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தேவை ஏற்படின் மட்டும், சிறிய பரிசோதனைகளைச் செய்து உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ளலாம்.

மூன்றாவது, கர்ப்ப காலத்தில் Folic acid எடுப்பது மிக முக்கியமாகும். இது எமது நாளாந்த உணவில் காணப்படும் ஒரு விற்றமின் ஆகும். Folic acid ஆனது, சிசுவின் மூளை வளர்ச்சிக்கும், மண்டையோட்டின் வளர்ச்சிக்கும், முண்ணான் மற்றும் முள்ளந்தண்டு வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும்.

ஆகவே, கர்ப்பம் தரித்த பெண்களுக்கு மேலதிகமான Folic acid மாத்திரை தேவைப்படுகின்றது. கர்ப்பம் தரிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்த Folic acid மாத்திரைகளை எடுக்க தொடங்க வேண்டும்.

ஏனெனில், குழந்தையின் பெரும்பாலான அங்கங்கள் பன்னிரண்டு வாரங்களிலேயே உருவாகி விடுகின்றன. நீங்கள் சுகாதார வைத்தியரிடமோ அல்லது மகப்பேற்று மருத்துவ நிபுணரிடமோ செல்லும் போது பத்து அல்லது பன்னிரண்டு வாரங்களாகி விட்டால், பின்னர் Folic acid மாத்திரைகளை எடுப்பதில் எந்த பயனும் இல்லை. இது ஒரு சாதாரண விற்றமின் ஆனால் குழந்தையின் வளர்ச்சிக்கு மிக அவசியம். பலர் இதை மருந்தாக எண்ணுகிறார்கள். இதனை எடுத்துக் கொள்வதால் பல பிரச்சினைகள் ஏற்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். அது தவறாகும்.

நான்காவதாக தடுப்பூசி ஏற்றிக் கொள்வது முக்கியமாகும். உதாரணமாக, ஜேர்மன் சின்னமுத்து, ருபெல்லா போன்ற தடுப்பூசிகளை சிறு வயதிலே போட்டுக்கொள்ள வேண்டும். இந்நோய்கள் வயிற்றில் சிசு இருக்கும் ஒருவரைத் தாக்கினால் அதோடு இருபது வாரங்களுக்கு முதலே நோய் ஏற்படுமானால், 90% ஆன குழந்தைகள் குறைபாட்டுடன் தான் பிறக்கின்றன. ஆகவே தான், இலங்கையில் பாடசாலை செல்லும் போதே பெண் பிள்ளைகளுக்கு இந்த தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. நீங்கள் இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டீர்களா என உங்களுக்கு சந்தேகம் இருந்தால், கருத்தரிப்பதற்கு முதலே, அதற்கான இரத்த பரிசோதனைகளைச் செய்து நோய் எதிர்ப்புத் திறன் உள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அப்படி அந்த நோய் எதிர்ப்புத் திறன் இல்லை எனில், குறித்த தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டு, இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின் நீங்கள் கருத்தரிக்கலாம். இப்போது அனைவரும் கவனம் செலுத்துவது Covid 19 தடுப்பூசி பற்றி ஆகும். இந்த தடுப்பூசி, ஆணினதோ அல்லது பெண்ணினதோ இனப்பெருக்கத் தொகுதியை பாதிப்பதில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



கருத்தரித்த பின் ஓடித்திரிவதை விட, இப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் போது, குழந்தைக்கு எதிர்பார்த்திருக்கும் ஆணும் பெண்ணும் Covid 19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது சிறந்தது. இவை பெண்களுக்கான உடல் நல ஆலோசனை ஆகும்.

ஆரம்பத்தில் சொன்னது போல உள ரீதியாகவும் உங்களை நீங்கள் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், கர்ப்ப காலத்தில் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல்வேறு மாற்றங்கள் நடக்கின்றன. இவற்றை எதிர்கொள்ள உங்களை நீங்கள் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். பெரும்பாலான பெண்களுக்கு சில சில உள மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது சாதாரணமான தாகும். மிகவும் அரிதாக சிலருக்கு, உளப்பிறழ்வுகள் (Stress/ Depression) ஏற்கனவே உள்ளவர்களுக்கு கர்ப்ப காலத்தில் இது கூடலாம். அவர்கள் மட்டும் அதற்குரிய ஆலோசனைகளைப் பெற்று, தேவை ஏற்படின் அதற்குரிய மருந்துகளை எடுத்து உங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். இது பெண்களுக்கான உள ரீதியான தயார்ப்படுத்தலாகும்.

கர்ப்பம் என்பது தம்பதியினருக்குரிய ஒரு விடயமாகும். ஆகவே, ஒரு ஆரோக்கியமான கர்ப்பத்திற்கு ஆரோக்கியமான முட்டை எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஆரோக்கியமான விந்தும் முக்கியம். ஆகவே, ஒரு ஆணின் உடல், உள ரீதியான நலம் அல்லது ஆரோக்கியம் மிகவும் முக்கியம். இதற்காக ஒரு ஆண் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆணிற்கும் உடல் நிறை பராமரிப்பு மிகவும் முக்கியம். உடல் நிறை குறைந்தவர்கள், கூட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் உடல் நிறை கூடியவர்கள், உணவு முறை மற்றும் உடற்பயிற்சி மூலம் நிறையை குறைத்துக் கொள்ள வேண்டும். அடுத்ததாக, ஆண்களும் தமக்கு இருக்கும் நாட்பட்ட மற்றும் பரம்பரையாக கடத்தப்படக் கூடிய நோய்கள் பற்றி கவனம் எடுக்க வேண்டும். அந்த நோய்களை அறிந்து, பரிசோதனைகளைச் செய்து, தேவை ஏற்படின் சிகிச்சைகளைப் பெற்று ஆண்கள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆணிற்கு நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் இல்லை என்றால், அது பல்வேறு வகையில் அந்த ஆணில் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்களது விந்தின் வீரியம், உறவு தொடர்பான தொழிற்பாடு போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது போல் மற்ற நோய்களும் அவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே ஆண்களும் அடிப்படையான பரிசோதனைகளைச் செய்து, மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதோடு மது, புகை மற்றும் போதைவஸ்து பழக்கம் அவர்களை மட்டுமல்லாது அவர்களது மொத்த குடும்பம் மற்றும் சமூகத்தையும் பாதிக்கின்றது. இவற்றை தவிர்த்துக் கொள்வது சிறந்தது.

உடல்நலம் போலவே, ஒரு கணவனின் உள நலமும், கர்ப்பம் தரிக்கும் பெண்ணில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஒரு ஆண் மிகவும் மன அழுத்தத்திற்கு உள்ளாகி இருந்தால், அது அவரின் விந்து அணுக்களை மற்றும் அவரின் தொழிற்பாடுகளைப் பாதிக்கும். ஆகவே, ஒரு கணவனின் உளநலம் அவர்களது மண வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் மிகவும் முக்கியம். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு உதவியாக இருந்து, அவர்களது ஒவ்வொரு செயற்பாடுகளிலும்பங்கு கொண்டு பராமரிப்பது அவசியம். ஆகவே, உடல் மற்றும் உள ரீதியாக உங்களை நீங்கள் தயார்ப்படுத்தி, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம்.

(முற்றும்)

Dr.A.சிறீதரன்,
பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.
# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2024ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகள், வேலைகள் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**a. Supplies Categories**

| S.No | Supplies | Categories | | | Non Refundable Fees Rs. | Link |
|---|---|---|---|---|---|---|
| | | Items | Main Items | Sub Items | | |
| 1 | Goods | GA to GR | 18 | 107 | 300/=(10 Items) | https://forms.gle/8NM3AwqMFRcqikKf6 |
| 2 | Services | SA to SE | 05 | 38 | 300/=(10 Items) | https://forms.gle/hRhCdA4vUzPMgVhL8 |
| 3 | Works | WA to WC | 03 | 19 | 3000/= | https://forms.gle/rJi6X2QzFar56v5V8 |

**b. Supply Detalls**

**1. Supply of Goods**

**GA. Agricultural Items**
- GA01. Agriculture Equipment, Tools
- GA02. Fertilizers
- GA03. Seeds, Seeding, Saplings
- GA04. Poly Sack Bags
- GA05. Animals for Self-Employment (chicks, cows, goats)

**GB. Cloth Items**
- GB01. Bed sheets, Pillow, Pillow Covers
- GB02. Curtains
- GB03. Dresses for Men, Women
- GB04. Other Type of Cloths
- GB05. Table Cloth, Golden Cloth, Carpets
- GB06. Uniform, Uniform Materials
- GB07. Foot Wares, Rain Coats)

**GC. Consumable Items**
- GC01. Cleaning Equipment
- GC02. Cleaning Items
- GC03. Other consumable Items

**GD. Contract Materials**
- GD01. Aluminum Partition, Fitting
- GD02. Cement
- GD03. Gravel Sand
- GD04. Hard Ware Items
- GD05. Paints
- GD06. Plumping Goods
- GD07. Roofing Materials
- GD08. Random Rubble for Rip Rap
- GD09. River Sand
- GD10. Silt soil
- GD11. Stones
- GD12. Tiles & Marbles
- GD13. Timber
- GD14. Water Tanks

**GF. Electronic Items**
- GF01. Alarm Solution
- GF02. CCTV
- GF03. Camera and Equipment
- GF04. Desk Tops Computer, Lap Tops, Spare Parts
- GF05. Fax
- GF06. Intercom System
- GF07. Multi Media Projector, Smart board
- GF08. Network Services
- GF09. Printer
- GF10. Photo Copier, Spare Parts
- GF11. Roneo Machine
- GF12. Toner, Ribbon, Ink Cartridge
- GF13. Video Recorder

**GG. Fancy Goods**
- GG01. Fancy Items.
- GG02. Foot Wear
- GG03. Home Usage Product
- GG04. Leather Goods

**GH. Food Items**
- GH01. Biscuits
- GH02. Cereal Products
- GH03. Locally Product Food Item
- GH04. Milk Powder, Disposable Cups
- GH05. Non-Vegetarian (Break Fast, Lunch, Dinner)
- GH06. Short Eats
- GH07. Soft Drinks
- GH08. Vegetarian (Break Fast, Lunch, Dinner)
- GH09. Water Bottles

**GK. Machineries, Spare Parts**
- GK01. Equipment for Aluminum Fitting, Glass, Ply wood, MDF
- GK02. Equipment for Welding Works
- GK03. Equipment for Carpenter Works
- GK04. Equipment for Masonry Works
- GK05. Generator, Spare Parts
- GK06. Water Pump, Spare Parts
- GK07. Other Machineries, Spare parts

**GL. Medical Equipment**
- GL01. Baby Needs
- GL02. Furniture for Medical
- GL03. Medical Equipment
- GL04. Medical Drugs
- GL05. Pharmaceuticals Products
- GL06. Other Medical Products

**GM. Stationaries**
- GM01. School Bags
- GM02. Stationaries - office

**GN. Solar Systems**
- GN01. Solar Systems, Spare Parts.
- GN02. Solar On Grid, Off Grid System
- GN03. Solar Systems

**GO. Sports Items**
- GO01. Equipment for Gymnasium
- GO02. Musical Instrument
- GO03. Prizes for Winners
- GO04. Sports Equipment
- GO05. Sports Uniform, T-shirts

**GE. Electrical Equipment**
- GE01. Air Conditioner
- GE02. Electric Goods for Home
- GE03. Electric Goods for Office
- GE04. Electric Motor Pump
- GE05. Freezer
- GE06. Goods for Electrical Connection
- GE07. P.V.C Pipe Varieties
- GE08. Sound, Light Equipment
- GE09. Sewing Machine
- GE10. Transformer
- GE11. T.V, Mic, Speakers, etc.

**GI. Furniture**
- GI01. Chairs Knitting
- GI02. Mattress, Covers
- GI03. M.D.F Furniture
- GI04. Plastic Furniture
- GI05. Steel Furniture
- GI06. Wood Furniture

**GJ. Fishing Equipment**
- GJ01. Boat Engine, Tools, Spare Parts
- GJ02. Fishing Boat
- GJ03. Fishing Net, Rope, Twine
- GJ04. Other Fishing Relative Goods

**GP. Vehicle Relative Goods**
- GP01. Vehicle batteries, spare parts
- GP02. Vehicle Tires, tubes
- GP03. Other Vehicle spare parts

**GQ. Water Filter**
- GQ01. Water Filter, Spare Parts

**GR. Grocery Items**
- GR01. Cereals and Pulses
- GR02. Rice and flour
- GR03. Wheat flour
- GR04. Coconut oil and Vegetable oil

**2. Supply of Services**

**SA. Contract Equipment Hiring**
- SA01. 3 Cube Tipper
- SA02. D2 Dozer
- SA03. D3 Dozer
- SA04. PC30 Excavator
- SA05. 10 Ton Pad Foot Roller
- SA06. 15 Ton Pad Foot Roller

**SB. Printing**
- SB01. Banner Printing
- SB02. Book Binding
- SB03. Office ID
- SB04. Office Files
- SB05. Plastic Name Board
- SB06. Rubber Stamp, Date Stamp
- SB07. Screen Printing, Off-set Printing, Digital Printing

**SC. Vehicles**
- SC01. Vehicle Maintenance, Service
- SC02. Vehicle Lease, Rent
- SC03. Vehicle Tinkering
- SC04. Vehicle Mechanical
- SC05. Vehicle Interior, Upholstery
- SC06. Vehicle Air Condition
- SC07. Vehicle Insurance

**SD. Stage Event services**
- SD01.Panthal Service
- SD02.Sound & Light, Power supply Service
- SD03. Drama
- SD04. Music event
- SD05. Western dance and Classical dances
- SD06. Thavil and Nadaswaram

**SE. Virtual Services**
- SE01. Cleaning Services
- SE02. Electronic Items Maintenance on Spare Parts Repair
- SE03. Electrical Items Maintenance on Spare Parts Repair
- SE04. Furniture Maintenance, Repair
- SE05. Machineries Maintenance, Repair
- SE06. Photo Copier Maintenance, Repair
- SE07 Computer Maintenance, Repair
- SE08 Printers Maintenance, Repair
- SE09. Intercom, CCTV Maintenance, Repair
- SE10. Refrigerator, Air conditioner Maintenance, Repair
- SE11. Security Service
- SE12. Software Developing

**3. Supply of Works**

**WA. Contractors**
- WA01. Building
- WA02. Bridges
- WA03. Dredging, Reclamation
- WA04. Highway, Road
- WA05. Irrigation, Drainage Canal
- WA06. Maritime Construction
- WA07. Storm Water Disposal, Land Drainage
- WA08. Water Supply, Sewerage

**WB. Electrical, Mechanical Services**
- WB01. Electrical Installation (Low & Medium)
- WB02. Elevators, Escalators, Travellators
- WB03. Plumbing, drainage

**WC. Specialties**
- WC01. Aluminum, Finishes
- WC02. Carpentry, Joinery
- WC03. Floor, Wall, Ceiling Finishes
- WC04. Landscaping
- WC05. Light Metal Work
- WC06. Painting Work
- WC07. Water Proofing
- WC08. Welding Works

c. பதிவுசெய்ய விரும்புபவர்கள் http://www. kilinochchi. dist.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலம் பொதுவான நிபந்தனைகளுக்கு அமைய நிகழ்நிலை (Online) விண்ணப்பத்தினை பூரணப்படுத்தல் வேண்டும்.

d. பொருட்கள் சேவைகளுக்கான விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்கள் பதிவேற்றப்படுதல்வேண்டும்.
1. A3.: - வதிவிடச்சான்று :மின்கட்டணப் பட்டியல். தண்ணீர் கட்டணப் பட்டியல். தொலைபேசி கட்டணப் பட்டியல் , வங்கிக்கணக்கு புத்தகத்தின் பிரதி என்பவற்றில் ஏதேனும் ஒன்று.
2. B1.4: - வியாபாரப்பதிவுச்சான்றிதழ்
3. B4.3: - வங்கிக்கணக்கு புத்தகத்தின் பிரதி.
4. B6.4: - வங்கி வைப்புச் சிட்டை

e. வேலைக்கான விண்ணப்பத்தை பூரணப்படுத்த "d"இல் கூறப்பட்டதற்கு மேலதிகமாக கீழே கேட்டவற்றுக்கு "ICTAD" ஆவணத்திலிருந்து பதிவேற்றப்படுதல் வேண்டும்.
1. B8.1: - பதிவிலக்கம்
2. B8.2: - தரம்
3. B8.3: - புதுப்பித்தல்.

f. விண்ணப்பதாரியால் வழங்குநர்களைப் பதிவுக்கான வைப்பு பணத்தினை மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம் எனும் பெயரில் உள்ள 7041986 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்ய வேண்டும். (வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது)"

g. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய பத்து உப பொருட் தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.300/= மேலதிகமாக கோரப்படுகின்ற ஒவ்வொரு பத்து உபபொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 300/= வைப்பில் இடப்படல் வேண்டும்.

h. பதிவுக்காக நிகழ்நிலையில்(Online) பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் பிரதி நிகழ்நிலையில் (Online) பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்களின் பிரதி, மீளளிக்கப்படாத பணவைப்புப் சிட்டை என்பவற்றை 2023 நவம்பர் மாதம் 20ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

i. பதிவுக்கான விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலக அல்லது கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களின் நிதிக் கிளைகளில் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களை "பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம் கிளிநொச்சியின் 0212285484 மற்றும் 0212285352 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி. றூ.கேதீஸ்வரன்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

தொலைபேசி: - 0212285484,
தொலைநகல்: - 0212285352

(சி.7350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத நெருக்கடியில் பாகிஸ்தான்

## திண்டாடும் மக்கள்

(இஸ்லாமாபாத்)

அண்மைக்காலமாக பாகிஸ்தான் அரசானது வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றது.

குறிப்பாக விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், பெற்றோல் விலையேற்றம், மின்சார தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினையால் அந்நாட்டு மக்கள் திண்டாடி வருகின்றனர்.

இதனால் சொந்த நாட்டில் பிழைக்க வழியில்லாததால் பலர் அங்கு பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக அண்மைக்காலமாக பாகிஸ்தானைச் சேர்ந்த பலர் அரபு நாடுகளுக்கு முறையாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ சென்று அங்கு பிச்சை எடுக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக சட்ட ரீதியாக அங்கு நுழைய முயல்பவர்கள், இஸ்லாமியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் 'உம்ரா விசா' எனும் அனுமதியை பெற்று அங்கு நுழைகிறார்கள்.

இது தவிர இஸ்லாமியர்களின் புனித தலமான மெக்கா இருக்கும் சாலைகளில் திருட்டுகளில் ஈடுபடும் பெரும் பகுதியினரும் பாகிஸ்தானியர்களே எனவும் ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அரபு நாடுகளில் பிச்சை எடுப்பவர்களுக்கு சிறை தண்டனை வழங்கப்பட்டுவரும் நிலையில் அவ்வாறு சிறையிலடைக்கப்பட்ட பிச்சைக்காரர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் எனவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர்களது வருகையைத் தடுக்க நடவடிக்கை எடுக்க சவுதி அரேபியாவும் ஈராக்கும் பாகிஸ்தானிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நியூயோர்க்கில் கனமழை

## அவசர நிலை பிரகடனம்




(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பெய்த கனமழையால் மற்றும் ஆபத்தான புயலால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், நியூயோர்க் பெரு நகரப் பகுதியிலும் கிழக்கு கடற்கரையை அண்டிய பிற முக்கிய நகரங்களிலும் நேற்று சுமார் 18 மில்லியன் மக்கள் வெள்ள எச்சரிக்கை நிலையை எதிர்கொண்டனர்.

நாட்டில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரத்தில் பெய்த கனமழையால் வீதிகள் சிறிய ஏரிகளாக மாறின.

கனமழை காரணமாக நியூயோர்க் நகரத்திற்கு மதியம் வரை வெள்ள எச்சரிக்கை தேசிய வானிலை சேவையால் விடுக்கப்பட்டது.

உயரமான இடத்திற்குச் சென்று உங்கள் உயிரைப் பாதுகாக்க விரைவாக செயற்படுங்கள் என்று தேசிய வானிலை சேவை தனது வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட ஒரு ஆலோசனையில் தெரிவித்துள்ளது.

கடும் மழை காரணமாக நியூயோர்க் நகரம், லாங் தீவு மற்றும் ஹட்சன் பள்ளத்தாக்கு பகுதிகளில் அவசர நிலை பிரகடனம் செய்ய நியூயோர்க் ஆளுநர் கேத்தி உத்தரவிட்டுள்ளார். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5' 4
தகைமை/தொழில்: BSc, MSc (Data Science) Software engineer (London)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. Paramedical
தொ.இ: B/13998

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம்
தகைமை/தொழில்: இயந்திரவியல் Diploma, service advisor
எதிர்பார்ப்பு: நல்ல குணமுள்ள பெண்
தொ.இ: B/14000

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம் : சுவாதி
கி.பா: 31
உயரம்: 173 cm
தகைமை/தொழில்: HND
எதிர்பார்ப்பு : கணக்காளர் / காசாளர் (pvt) நற்குணமான பெண்
தொ.இ: B/13413

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுஷம்
உயரம் : 5' 5
தகைமை/ தொழில்: O/L மொத்த விற்பனை நிலையம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/13799

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 17
உயரம்: 170 cm
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு / உள்நாடு
தொ.இ:G/12110

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை 12 இல் சூரி செவ்
கி.பா: 20
உயரம்: 5' 7
தகைமை/தொழில்: Software engineer ICT Teacher
எதிர்பார்ப்பு: வெளிநாடு / உள்நாடு
தொ.இ: G/13680

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 51 1/4
உயரம்: 5'4
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை (சைவ போசனம்)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் / அசைவமும் ஏற்றுக் கொள்ளப்படும்
தொ.இ:G/13687

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3 இல் சூரி. செவ்
கி.பா: 23
உயரம் : 5' 3
தகைமை/தொழில்: BBA Management Trainee (சைவபோசனம்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி/ சைவபோசனம்
தொ.இ:G/13603

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ரஷ்யாவின் ராடர் நிலையத்தை தாக்கி அழித்தது உக்ரைன்

(கீவ்)

உக்ரைன் பாதுகாப்பு சேவையின் ஆளில்லா விமானம் கடந்த வியாழக்கிழமை ரஷ்ய ராடர் நிலையத்தை தாக்கி அழித்துள்ளது.

குர்ஸ்க் ஒப்லாஸ்ட்டின் பெலோவ்ஸ்கி மாவட்டத்தின் கிரிகுடியிருப்புக்கு அருகில் இரகசியமாக நிறுவப்பட்டிருந்த கஸ்டா ரஷ்ய ராடர் நிலையத்தையே எஸ்எஸ்யு ட்ரோன் கண்டறிந்து அழித்ததாக உக்ரைன் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த ராடர் நிலையம் திருட்டுத் தொழில்நுட்பம் கொண்ட விமானங்களைக் கூட கண்டறியும் திறன் வாய்ந்தது என்று ரஷ்யா தெரிவித்து வந்தது. இந்த ராடரின் தனித்தன்மை மிகக் குறைந்த உயரத்தில் வான்வழி இலக்குகளை அடையாளம் காணும் திறன் கொண்டதாகும்.

இவ்வாறு தனித்தன்மை கொண்ட ராடர் நிலையத்தையே தமது ஆளில்லா விமானம் தாக்கி அழித்துள்ளதாக உக்ரைன் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)


## வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கும் Courier நிறுவனத்திற்கு Branch Executive தேவை. வயது 18-35 வரை.

TP :- 076 690 8967 / 076 690 8978 (c-2123)

## ENGLISH CLASSES

(For Group of Minimum Five Members)

- English Language.................. Gr9,Gr10,Gr11,GCE A/L
- English Literature.......................Gr10,Gr11,GCE A/L
- English Language Literature Classes.......... For Degree Classes
- IELTS...................Preparation Classes
- TOFEL.................. Preparation Classes
- Spoken English............
- Business Communication...........Public & Private Sector Employees (English for Employees of Public and Private Sector)

Starts on 03.10.2023

*Note: School Students Should come with parents for enrolment*

பாடசாலை மாணவர்கள் பதிவிற்கு பெற்றோருடன் வருகை தரல் வேண்டும்

*Teacher : Mr.K.Subramaniam*
*(Retd.ADE - English)*

[illegible] ROAD, KONDAVIL.
TP:- 077 351 8308, 071 812 5937.
(17222)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை தன்னுடைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விசாரணை நடத்துவதாக இருந்தால் சர்வதேசம் அதனைச் செய்ய வேண்டும்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவண ராஜா தனது பதவியை இராஜினாமாச் செய்து நாட்டை விட்டு வெளியேறிய விவகாரம் தென் பகுதியில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

குருந்தூர்மலை தொடர்பில் வழங்கிய தீர்ப்பை அடுத்து தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் தீர்ப்பை மாற்றி வழங்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அதனால்தான் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும் நீதிபதி சரவணராஜா வழங்கிய தன்னிலை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமை இதுவாக இருக்கையில், நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் விசாரணை நடத்தப்படுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் மேற்குறித்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்குதான் விசாரணை என்ற பெயரில் மற்றொரு நாடகத்தை சிங்களப் பேரினவாதம் அரங்கேற்றப் போகிறது.

ஆம், குருந்தூர்மலை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பாராளுமன்றத்தில் வைத்து சரத் வீரசேகர மிக மோசமாக விமர்சித்து உரையாற்றியிருந்தார்.

ஒரு நீதிபதியின் தீர்ப்பை பாராளுமன்றத்தில் வைத்து மிக மோசமாக விமர்சித்த விடயம் உலகறிந்த உண்மை.

நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்தில் வைத்து மோசமான வார்த்தைப் பிரயோகங்களை கொண்டு விமர்சிக்கின்ற நிலைமை இருக்கும்போது, பிரஸ்தாப நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லை, தீர்ப்பை மாற்றி எழுதுமாறு அழுத்தம் கொடுக்கப்படவில்லை என்று யாராலும் கூறமுடியாது.

தவிர, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகலுக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக விசாரணை நடத்துவதென்பது ஒரு கண்துடைப்பு நாடகமேயன்றி வேறில்லை.

பொதுவில் வெளிநாடுகளைச் சமாளிப்பதற்காகவும் குறித்த விடயத்தை மழுங்கடிப்பதற்காகவும் ஆட்சித் தரப்பு கையிலெடுக்கின்ற ஓர் ஆயுதம்தான் விசாரணை. இந்த விசாரணையால் எதுவும் நடக்கப் போவதில்லை.

தவிர, விசாரணைக்குழுவில் தமிழ் நீதிபதிகள் எவருக்கும் இடம் வழங்கப்படவும் மாட்டாது.

அப்படி சாட்டுப் போக்குக்கு இடம் கொடுத்தாலும் அதனைத் தமிழ் நீதிபதிகள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

ஏனெனில் ஏலவே ஒரு தமிழ் நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடியுள்ளார். எனவே அவருக்கு ஏற்பட்ட கதி தமக்கும் ஏற்படக்கூடாது என்பதில் தமிழ் நீதிபதிகள் உறுதியாக இருப்பர்.

ஆனால் விசாரணைக்குழுக்களில் இடம் பெறுவதை தமிழ் நீதிபதிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

ஆக, அரசாங்கத்தால் நடத்தப்படும் விசாரணை எந்தவகையிலும் உண்மையை வெளிப்படுத்தப் போவதில்லை. மாறாக குறித்த நீதிபதி மீது குற்றம் சாட்டுவதாகவே விசாரணை அறிக்கை அமையும்.

ஆகையால் விசாரணை நடத்துவதாக இருந்தால், அதனை நீதித்துறை சார்ந்த சர்வதேச அமைப்புகள் நடத்த வேண்டும்.

இல்லையேல் அந்த விசாரணை தேவையற்றது.

# மக்கள் மீது சுமைகளை அதிகரிக்கும் வரிகளை இனி உயர்த்த முடியாது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாட்டு மக்கள் மீது மேலும் சுமையை ஏற்படுத்தும் வரிகளை அதிகரிக்க முடியதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்ற ஜனாதிபதி ரணில், நாடு திரும்பிய போது இதனை தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பிய அன்றையதினம் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதியை சந்தித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளை சந்திப்பதற்கு முன் ஆயத்தமாக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியதாக நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி அதிகாரிகள் நடத்தியதாக ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், வரியை மேலும் அதிகரிக்குமாறு கூறுவதாகவும் அவர்கள் அரசின் வருமானம் போதவில்லை என சுட்டிக்காட்டியதாகவும் நிதி அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இந்தநிலையில், எங்களால் இனியும் மக்கள் மீது சுமையை ஏற்படுத்த முடியாது. நாங்கள் அதிகபட்சமாக சுமையை ஏற்றியுள்ளோம். அரசின் வருவாய் குறைவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவர்களிடம் நாங்கள் அந்த விடயங்களை தெளிவுபடுத்துவோம்.

என்ன செய்தாலும் இனி வரியை உயர்த்த முடியாது என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## 10 ஆயிரம் வங்கி ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவர்

(கொழும்பு)

இலங்கையில் வங்கித் துறையில் மாத்திரம் கிட்டத்தட்ட 10ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டை விட்டு பல நிபுணர்கள் வெளியேறிவிட்டதாகவும், அரசாங்கம் இவர்களது கோரிக்கைகளை ஏற்காத பட்சத்தில் புலம்பெயர்தல் விகிதம் அதிகரிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இருந்து இன்னும் வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாக இருந்தால் சர்வதேச நாணய நிதியம் சொல்வதற்கு எதிர்மாறான விளைவுகளை இலங்கை சந்திக்க நேரிடும்.

ஏனென்றால் சர்வதேச நாணய நிதியத்தினுடைய உதவி வெறுமனே 2.9 பில்லியன் டொலர்கள் மாத்திரம்தான். அது பெரிய தொகை அல்ல.

ஆனால், இந்த புலமையாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் எல்லாம் வெளியேறினால் அதன் விளைவு இந்த 2.9 பில்லியனை விட எத்தனையோ மடங்கு இருக்கக் கூடும். அது பாரதூரமானது.

ஆகவேதான் சர்வதேச நாணய நிதியம் சொல்லும் அத்தனையையும் இலங்கை அரசாங்கம் கேட்க இயலாது. அப்படி செய்தால் அது இலங்கை அரசாங்கத்தின் மீது பெரிய பிரச்சினையை எதிர்காலத்தில் ஏற்படுத்தும். பொருளாதாரத்திலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சூட்சுமமாக வாழைப்பழ சீப்பினூடாக சிறை வந்த போதைப்பொருள்

### களுத்துறை சிறைச்சாலையில் சம்பவம்

(களுத்துறை)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கு கொண்டு வரப்பட்ட வாழைப்பழசீப்பில்,

ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களை பார்வையிட வந்த நபர் ஒருவர் சந்தேக நபர்களுக்கு வழங்குவதற்காக உணவை எடுத்து வந்துள்ளார்.

அதில் சந்தேகநபர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட வாழைப்பழங்களில் 03 மற்றும் 04 அங்குலங்கள் கொண்ட 16 உறிஞ்சு (ஸ்ட்ரோ) குழாய்களுக்குள் இந்த ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் போதைப்பொருட்களை கொண்டு வந்த நபர் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்,

சம்பவம் தொடர்பில் களுத்துறை சிறைச்சாலையால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## கறுவாத் தோட்டத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

நெலுவ, பன்னிமுல்ல பகுதியில் உள்ள கறுவா தோட்டத்திலிருந்து சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்டிருந்த குறித்த பெண் கடந்த 23ம் திகதி முதல் காணாமல் போயிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி நேற்று முன்தினம் பிற்பகல் கறுவா தோட்டம் ஒன்றிலிருந்து அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

உயிரிழந்தவர் 70 வயதுடைய பெண் என தெரியவந்துள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் நெலுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பொல்கஹவெல, ஹபத்கம பிரதேசத்தில் வடிகானில் தவறி விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

55 வயதுடைய சிறைச்சாலை திணைக்கள சார்ஜன்டான குறித்த நபர், இரவு வீட்டை விட்டு வெளியேறி வீடு திரும்பாத நிலையில் அவரை தேடிய போதே சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## போலி கஜமுத்துடன் நால்வர் கைது

போலியாக தயாரிக்கப்பட்ட கஜமுத்துடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் பயணித்த வானொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தெஹியோவிட்ட பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்த போதே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 24 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று தெரிவித்த தெஹியோவிட்ட பொலிஸார், சந்தேகநபர்களிடம் இருந்து 19 கிராம் 400 மில்லிகிராம் நிறையைக் கொண்ட கஜமுத்துவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாவனெல்லை மற்றும் பிலிமத்தலாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதியின் பதவி விலகலில் தெரியும் இலங்கையின் கொடூர இனவெறி

(லண்டன்)

**“ஒரு மூத்த தமிழ் நீதிபதி தனது பல நீதித்துறை பதவிகளில் இருந்து விலகுமளவுக்கு அச்சுறுத்தப்பட்டமையானது இலங்கையில் தமிழர்களுக்கு உள்நாட்டு பரிகாரம் இல்லை என்பது மட்டுமல்லாமல் தமிழ் நீதிபதிகளின் உயிருக்கும் ஆபத்து உள்ளது என்பதை தெளிவாக காட்டுகிறது. இந்த நிலையில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நல்லிணக்கம் என்ற பேச்சு மனித நேயத்தை அவமதிக்கும் செயலாகும்.” என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நீதிபதி பதவி விலகியமை தெடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.**

மேலும், இவ்விடயம் தொடர்பான அறிக்கையில், “செப்டம்பர் 23, 2013 அன்று, நீதிபதி ரி.சரவண ராஜா முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி, நியாயாதிபதி பதவி, குடும்ப நீதிமன்ற நீதிபதி பதவி, முதன்மைநீதிமன்ற நீதிபதி பதவி, சிறிய உரிமை கோரல் நீதிமன்ற நீதிபதி பதவி, மற்றும் சிறார் நீதிமன்ற நீதிபதி பதவி ஆகிய பதவிகளிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அவர் அனுப்பிய கடிதத்தில் அவர் ராஜினாமா செய்ததற்கு, "எனது உயிருக்கு அச்சுறுத்தல்" மற்றும் “அதிக மன அழுத்தம்" காரணமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

குருந்தூர்மலை விகாரை விவகாரம் தொடர்பாக அவர் வழங்கிய தீர்ப்பின் காரணமாகவே நீதிபதி சரவணராஜா உயிருக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொல்பொருள் கண்டுபிடிப்பு என்ற பொய்யான சாக்குப்போக்கின் கீழ், சிங்கள இனக்குழுவை உள்ளடக்கிய இலங்கை அரசு, பல ஆண்டுகளாக, தற்போதும் கூட, இந்து கோவில்களை முழுமையாக அழித்து, புத்த கோவில்களாக மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

தமிழ்க் கோயில்கள் மட்டுமல்ல, தமிழ் நீதிபதிகளும் உடனடி அச்சுறுத்தலை எதிர்கொண்டனர் - தொடர்ந்து எதிர்கொண்டுள்ளனர் என்பதை இப்போது நாம் அறிவோம்.

ராஜபக்ஷ மற்றும் சிங்கள தீவிரவாதிகளால் இழுக்கப்படும் ஒரு பொம்மை ஜனாதிபதி விக்கிரமசிங்க என்பது நிதர்சனமான உண்மை. இந்த சம்பவம் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் இயலாமையை தெளிவாக காட்டுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, எந்தக் குற்றமும் செய்யாமல், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டியதற்காகத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் ஒரு தமிழனின் இந்தச் சம்பவம் அதிர்ச்சியளிக்கக்கூடிய ஒன்றல்ல.

இது இலங்கைத் தீவில் நிலவும் கொடூரமான இனவெறிக்கு மிகச் சமீபத்திய உதாரணம் மட்டுமே.

இலங்கைத் தீவில் தமிழர்கள் மீதான துன்புறுத்தல் மற்றும் இனப்படுகொலையின் வரலாற்றுச் சூழலைக் கருத்தில் கொண்டால், மனிதஉரிமைகள் பேரவையின் சர்வதேச குற்றங்கள் - இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் - இறுதிக்கட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்ட உள் விசாரணை என்பன ஒரு கொடூரமான நகைச்சுவை மட்டுமல்ல, மனித உரிமைகள் பேரவையின் நேர்மையையும் கேள்விக்கு உட்படுத்துகிறது.

இலங்கையில் உள்ள நீதித்துறையின் தமிழ் உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் செய்வதற்கு பாதுகாப்பற்றவர்களாக இருந்தால், பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் சுதந்திரமாகப் பேசவும் பாதுகாப்பாகவும் இருப்பார்கள் என்று மனித உரிமைகள் பேரவை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்?" என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஙி)

# நீதிபதியின் வெளியேற்றம் புகலிடக் கோரிக்கைக்கானதாம்

## வீரசேகரவின் புதிய கண்டுபிடிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவை நான் அச்சுறுத்தவில்லை. அவர் புகலிடக் கோரிக்கைக்காக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளாரா என்ற சந்தேகம் நிலவுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலை விவகாரம் மற்றும் “தியாக தீபம்” திலீபனின் நினைவேந்தல் விவகாரம் போன்றவற்றில் மிக முக்கிய தீர்ப்புக்களை வழங்கிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா, உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் மிகையான அழுத்தங்கள் காரணமாகத் தனது அனைத்துப் பதவிகளிலிருந்து விலகுவதாக குறிப்பிட்டு நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், இவரது பதவி விலகல் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு நான் அச்சுறுத்தல் விடுத்ததாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் என்னை சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டுள்ளதை அவதானித்துள்ளேன்.


இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நான் நீதிபதியை அச்சுறுத்தவில்லை. நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடவும் இல்லை.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிபதி பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக குறிப்பிடுவது பாரதூரமானது. நாட்டில் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்களின் நிலை எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

சட்டம் மற்றும் பாதுகாப்பு துறை மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதனை அலட்சியப்படுத்த முடியாது.

நீதிபதி குறிப்பிடுவதைப் போன்று அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்திருந்தால் அவர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். அல்லது பொறுப்பான தரப்பினருக்கு அறிவித்திருக்கலாம்.

உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் அவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தாரா என்பதை அறியவில்லை. கடந்த காலங்களில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொள்வதற்காக பலர் தமக்கு இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்பதையே சர்வதேசத்திடம் முன்வைத்தார்கள்.



இந்தக் குற்றச்சாட்டும் புகலிடக் கோரிக்கையை நோக்கமாகக் கொண்டுள்ளதா என்பதும் பிரச்சினைக்குரியதாக உள்ளது.

எவ்வாறு இருப்பினும் நீதிபதி குறிப்பிட்ட விடயங்கள் பாரதூரமானவை. இவ்விடயம் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நீதியமைச்சருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவேன் என தெரிவித்துள்ளார். (ஙி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 450 | 500 |
| தக்காளி | 180 | 180 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 180 | 180 | 160 |
| கோவா | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 300 | 350 | 250 | 400 |
| பூசணி | 60 | 80 | 80 | 80 |
| புடோல் | 80 | 100 | 100 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 450 |
| வெண்டக்காய் | 80 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 210 | 200 |
| லீக்ஸ் | 160 | 180 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 350 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 150 | 100 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 500 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 150 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 160 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நீர்த்தொட்டியில்...

கில் உள்ள தண்ணீர்த் தொட்டியில் தவறிவிழுந்து குழந்தை உயிரிழந்ததாக பொலிசார் தெரிவித்தனர். (ம-7,316)

## அடுத்துவரும்...

ஊடகவியாளர்கள் கேள்வி எழுப்பியி ருந்தனர்.

இதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த, நாமல் ராஜபக்ஷ வுக்கு இன்னும் வயது உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எந்த நேரத்திலும் தேர்த லுக்கு பொதுஜன பெரமுன தயாராக இருப்பதாகவும், அதற்காக அச்சம் இல்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-7)

## மக்களிடையே...

சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்டுள்ள "2023 - செப் ரெம்பர் - பொது நிர்வாக பகுப்பாய்வு மதிப்பீட்டு அறிக்கை"யில் இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தை மட்டுப்படுத்துதல், நாணய மாற்று விகிதங்களை ஸ்திரப் படுத்துதல், இலங்கை மத்திய வங்கி யின் இருப்புகளை மீள கட்டியெழுப்பு தல் ஆகியவற்றுடன் பொருளாதார ஸ்திரப்படுத்தலில் தற்காலிக முன் னேற்றங்கள் இருந்த போதிலும், இந்த நிலை உருவாகியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் புதிய அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தித்துறையில் வரித் திருத் தங்கள், செலவை ஈடு செய்வதற்காக முன்வைக்கப்பட்ட விலை நிர்ணயம், நிலுவைத் தொகை நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் எடுத்த நடவடிக் கைகள் என்பன வாழ்க்கைச் செலவை உயர்த்தியுள்ளதாகவும் அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் தொடர்ச்சியான தட்டுப்பாடு, போராட் டக்காரர்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் உள்ளூராட் சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட் டமை என்பன பொதுமக்களின் அதி ருப்திக்கு வழிவகுத்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வெளிநாட்டு...

தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்துவது தொடர்பாக கலந் துரையாடுவதற்கு முன், சர்வதேச தொழிலாளர் சந்தை குறித்த ஆய்வு கள் நடத்தப்பட வேண்டும் என்றும், தகுதியான புலம்பெயர் தொழிலாளர் களை உருவாக்கும் பொறுப்பை அர சாங்கம் ஏற்க வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதேபோன்று எமது நாட்டுக்கு ஏற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும் என்றும், இதற்கு அனைத்து பொறுப்பு வாய்ந்த தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும், வெளிநாடுகளுக் குச் செல்லும் தொழிலாளர்கள் குறிப் பிட்ட காலம் முடிந்து மீண்டும் தாயகம் திரும்பியதும் மகிழ்ச்சியாக வாழும் சூழல் நாட்டில் ஏற்படுத்தப்பட வேண் டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-7)

## சரத் வீரசேகர...

போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குருந்தூர் விகாரை தொடர்பான வழக்கை விசாரித்து வந்த நீதிபதி திடீ ரென இந்தக் குண்டர்களின் அச்சுறுத் தல்களால் பதவி விலகியுள்ளார்.

அத்துடன் குருந்தூர் விகாரை பௌத் தர்கள் மற்றும் இந்துக்கள் வழிபாட்டுத் தலமாக விளங்குவதாகத் தெரிவித்த அவர், தொல்பொருள் திணைக்கள மும் ஒரு இனவெறித் துறவியும் இணை ந்து அங்கு பெரும் குழப்பத்தை ஏற் படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தி யுள்ளார். (ம-7)

## இந்த நாடும்...

யாக சாடியுள்ளார்.

நீதிபதி சரவணராஜா பதவி வில கியமை தொடர்பில் தகவல் வெளி யிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் பேசிய அவர், "குருந்தூர்மலை சம்பந்தமான முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்தல், அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தல் மற்றும் அழுத்தங்களைப் பிரயோகித்தல் ஆகிய விடயங்கள் மிகவும் வன்மை யாகக் கண்டிக்கத்தக்கவையாகும்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தன் மீது பயன்படுத்தப்பட்ட அழுத்தங்கள் காரணமாகப் பதவியில் இருந்தும் விலகியுள்ளார்.

அதேவேளை, உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டும் அவர் வெளியேறியுள்ளார். இதனூடாக அவர் சந்தித்த நெருக்கடிகள் எவ்வாறு இருந்தன என்பதை விளங்கக்கூடிய தாக இருக்கின்றது. இந்த விவகாரம் தொடர்பில் நாடும் அரசும் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

நீதிமன்றமும் நீதிபதிகளும் சுதந்திர மாகச் செயற்பட இடமளிக்க வேண் டும். அவ்வாறு இருந்தால்தான் மக் கள் நீதிமன்றம் சென்று நீதியைப் பெற முடியும். நீதிமன்றத்தினதும் நீதிபதி களினதும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத் தினால் அது பாரதூரமான குற்றமாகும்.

இந்த விடயம் சம்பந்தமாக உள் நாட்டு விசாரணை மாத்திரமல்ல வெளி நாட்டு விசாரணையும் நடக்க வேண்டி யது அவசியம்.

இலங்கையின் நீதித்துறை சுதந் திரத்தைப் பறிக்கும் இந்தப் பாரதூர மான செயல்களை வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் மிகவும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். அத்துடன் நீதிபதி சரவணராஜா மீள வும் பதவியை ஏற்பதற்கும், அவர் சுதந் திரமாகக் கடமையாற்றுவதற்கும் ஏது வான நடவடிக் கைகளை சர்வ தேச சமூகம் விரைந்து எடுக்க வேண்டும்" என் றார். (ம-7)

## பயங்...

நுட்ப துறையினர் சிவில் சமூகத் தினர் மற்றும் பல தரப்பட்ட நிபுணர் களின் கருத் தினை உள்வாங் குவது அவசியம்.

இது அடிப் படை உரிமை அதுபேச்சு வார்த் தைகளிற்கு அப் பாற்பட்ட விடயம் அதனை பாது காக்க வேண்டும் எனவும் தெரிவித் துள்ளார்.

தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தரா தரங்கள் ஏனைய ஜனநாயக நாடு களில் உள்ள சிறந்த நடை முறைகளிற்கு ஏற்ப மாற்றிய மைப்பது குறித்த தனது வாக்குறு தியை இலங்கை அரசாங்கம் பின் பற்ற வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின் றோம் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

வலுவான சட்டமூலத்தின் மூலம் சரியான சமநிலையைப் பேணுவது சட்ட பூர்வமான ஒன்றுகூட லிற்கு அனுமதிப்பது சட்ட அமுலாக் கல் அதிகாரிகள் அச்சுறுத்தல் களை வலுவான விதத்தில் கையாளக்கூடிய விதத்தில் அவர்களை வலுப்படுத்து வது ஆகியவை அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# சிவனொளிபாத மலைக்கு செல்லத் தடை

(கொழும்பு)

அனுமதியின்றி பருவகாலம் இல் லாத காலப்பகுதியில் சிவனொளிபாத மலைக்கு செல்வது தடைசெய்யப்பட் டுள்ளதாக நுவரெலிய மாவட்ட செய லாளர் அறிவித்துள்ளார்.

நுவரெலிய மாவட்ட செயலாளர் நந்தன கலபட நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

அனுமதியின்றி பருவகாலம் இல் லாத காலப்பகுதியில் சிவனொளிபாத மலைக்கு சென்று வழிபடலாம் என அண்மைய நாட்களில் வெளியான செய்திகள் உண்மையல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2023.09.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1283
O 28 37 47 65 O
டபல் சான்ஸ் 03437

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3495
சீட்டிழுப்பு திகதி 30.09.2023
U 02 15 39 74
U 51081

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.30
சீட்டிழுப்பு இலக்கம் 562
மீனம் 16 43 47 62 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/30
சீட்டிழுப்பு இலக்கம் 5253
R 1 0 5 2 9 6

மெகா பவர்
திகதி 30/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1601
J 03 50 51 68 74
07900

லக்கி 7
திகதி 30.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0079
L7 இலக்கம் 1 3
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 4 9 7 8 4 7

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2053
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.09.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,241,176/-
39 47 52 57 Y
17150 742

சனிதா
திகதி 2023.09.30 வெற்றி வாரம் 4388 வர்ணம் இளம் பச்சை
24 38 39 65 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,115,392.00
13958 364

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3939 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.30 தினம் சனிக்கிழமை
06 43 50 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,650,164/-
11495 542

கப்ருக
30.09.2023 வெற்றி வாரம் 1403 வர்ணம் சிவப்பு
X 25 22 30 34 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 446,188,474.20
40711 472
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

சவ்சிரிதன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 633 திகதி 2023-09-30 வர்ணம் ஆரஞ்சு நிறம்
X 23 42 57 08
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,884,608.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 545/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2227 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.09.30 தினம் சனிக்கிழமை
29 37 62 66 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,674,684.40
80587 736


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?

*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி

*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7354)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

யாழ் - கொழும்பு 2,900/=

வடமராட்சி - கொழும்பு 2,700/=



(17019)

T.P: 077 544 8503

## CANADA VISITOR VISA



VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7354)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## விற்பனைக்கு

10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள கடல் அட்டைப் பண்ணை சகல வசதிகளுடன் அரியாலை கிழக்கில் விற்பனைக்குண்டு. புதிய இறால் கூடு, நிலவலை, நூல் வலை, கரைவலை விற்பனைக்குண்டு. (17277)

070 656 0342
077 875 7860

உ

சிவமயம்

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

## சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

## பகிரங்க அறிவித்தல்

சைவபரிபாலன சபைக்கு சொந்தமான காணிகளான இறாவளைவயல், கோயிலாக்கண்டி (நெற்பரப்பு 550) மற்றும் சிதம்பர சித்தி விநாயகர், மறவன்புலோ அயற்காணிகளான கொங்கமாவடி, தாராமோட்டை, பண்டிக்குளம், விளாப்பு(நெற்பரப்பு 705) என்பவற்றில் குத்தகை அடிப்படையில் பயிர்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கான பகிரங்க அறிவித்தல்.

சைவபரிபாலன சபை நிர்வாகத்தினரால் 15.10.2023 அன்று காலை 9.00 மணிக்கு இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் குத்தகைதாரர்களுடனான விசேட கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறித்த கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதால் குறிப்பிட்ட காணிகளில் குத்தகை அடிப்படையில் பயிர்செய்பவர்கள் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்
சைவபரிபாலன சபை

(17274)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர மையத்திலிருந்து யாழ் நோக்கி 1Km தூரத்திலும் A9 வீதியிலிருந்து 100m உள்நோக்கிய தூரத்தில் 2 1/2 பரப்பு நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இது ஓர் வயற்கரையை அண்டிய இயற்கை சூழலில் அமைந்திருப்பதால் விருந்தினர் விடுதி அமைப்பதற்கு பொருத்தமான சூழலாக உள்ளது.

பரப்பு : 20 இலட்சம் (மாறாத விலை) (17299)

077 3255 474

## சமையலாளர் தேவை

இந்திய உணவு வகைகள் செய்யக்கூடியவர்கள் (தோசை,பூரி, சப்பாத்தி) உள்நாட்டு உணவு வகைகள், சிற்றுண்டி செய்யக்கூடியவர்கள் தேவை. (17292)

075 068 3810

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7317)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## வேலையாள் தேவை

நுணாவிலில் இயங்கும் மரத்தளபாட நிலையத்துக்கு தச்சு வேலையாள் தேவை. தச்சுவேலை பழகுபவர்களும் தேவை. (17295)

077 339 6323

## ஆசிரியர்கள் தேவை

ஆஸ்பத்திரி வீதி கோண்டாவிலில் இயங்கும் K.T.C கல்வி நிலையத்திற்கு ஆசிரியர்கள் தேவை.

தரம் 6,7,8 (I.C.T)
தரம் 9,10,11 (ஆங்கிலம்)

ஞான.திருக்கேதீஸ்வரன்
நிர்வாகி K.T.C (17283)

076 176 8821

## Joyful Holy Christian Matrimony

ELITE CHRISTIAN MATCHMAKING SERVICE

★ Personalized Service ★ Private & Confidential ★ Premium Database



www.joyfulholymatrimony.lk

270, Ferguson Road, Thotalanga, Colombo 15, Sri Lanka.

info@joyfulholymatrimony.lk

00 94 760 662 295 00 94 715 863 893 (17261)

## கட்டட வேலைகள்

பழைய வீட்டினை திருத்தியும் புதிய வீட்டினை நிர்மாணித்தும் தரப்படும். (17255)

074 077 1490

## பௌதிகவியல் வகுப்பு

23, 24, 25 Batch இற்கான பௌதிகவியல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இடம்: Y.M.C.A தம்பசிட்டி
நெல்லியடி
S.C.K வேம்படி (17230)

077 600 4896

## மணமகன் தேவை

1989ம் ஆண்டு காரைநகரைப் பிறப்பிடமாக கொண்ட தற்போது கனடாவில் P.H.D பயிற்சியுள்ள மீனராசி ரேவதி நட்சத்திரம் உள்ள மணமகளுக்கு கனடாவில் P.R உள்ள மணமகன் தேவை. (17260)

077 520 7999
077 757 7613

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (17282)

077 728 6061

## கடைத் தொகுதி விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி றோட்டில் இந்து கல்லூரிக்கு முன்பாக ஐந்து பரப்பில் அமைந்த கடைத் தொகுதி விற்பனைக்கு உள்ளது.



- கடை முன் பின் Parking வசதி
- அனைத்து ஆவணங்களும் முறையாக பேணப்படுகின்றது.
- காணியின் முற்பகுதியில் பஸ் தரிப்பிடம் உள்ளது.
- காணி பின் பகுதி களஞ்சியம்(Store) உள்ளது.
- மலசலகூடம் குளியல் அறை வசதி உள்ளது. (17296)

074 221 6395, 077 151 0027

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் கறையான் கட்டுப்படுத்தல் (Leading Pest Control) கம்பனிக்கு பணியாளர்கள் தேவை.

➤Technicians + Driver
- 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆரம்பச் சம்பளம் + EPF/ETF + சலுகைகள்
- வாகனம் செலுத்த தெரிந்திருத்தல் அவசியம்./ Light Vehicle

➤அலுவலக உத்தியோகத்தர்/ Admin Officers (Female)
- O/L, A/L
- ஆங்கிலம் பேசக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- 20-35 வயதெல்லை
- மோட்டார் வாகனம் செலுத்த தெரிந்திருத்தல் வேண்டும்.
- 15Km உட்பட்டவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது. (17297)

தங்களது சுயவிபரத்தை(CV) vikna.termite89@gmail.com இற்கு அனுப்பிவைக்கவும்.

No:77/1, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 076 315 6802 Whatsapp : 077 272 2942

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org